# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

இதழ் 265 சனி, டிசம்பர் 16, 2023 14 பக்கங்கள்


# தேர்தல் ஆண்டுக்கு தயாராகும் கட்சிகள்

அகிலன்



# அரசியல் மற்றும் இராஜதந்திர பணிகள் சரியாக மாற்றீடு செய்யப்பட வேண்டும்

வேல்ஸ் இல் இருந்து அருஸ்



# இமயமலைப் பிரகடனத்தை தமிழரசுக் கட்சி ஏற்கிறதா?

கேள்வி எழுப்பும் சுரேன் குருசுவாமி

## இலங்கைக்கு நிதி கிடைத்தது தொடர்பில் அமெரிக்கா மகிழ்ச்சி

அனைத்துலக நாணயநிதியத்தின் இரண்டாவது தவணைப் பணம் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்டது தொடர்பில் அமெரிக்கா திருப்தி கொண்டுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜுலி சாங் கடந்த வியாழக்கிழமை(14) தெரிவித்துள்ளார்.



இந்த நிதி கடைத்தது என்பது இலங்கை அரசு தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கானசந்தர்ப்பத்தைவழங்கியுள்ளது. அதாவது நல்லாட்சி மற்றும் மக்களின் பாதுகாப்பு என்பன முக்கியமானது.

இலங்கையின் பொருளாதார உறுதித்தன்மைக்கு அமெரிக்கா தொடர்ந்து உதவிகளை வழங்கும். என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அனைத்துலக நாணயநிதியம் கடந்த செவ்வாய்க்கிழமை(2) இலங்கைக்கு இரண்டாம் தவணைப் பணமாக 337 மில்லியன் டொலாகளை வழங்க அனுமதி வழங்கியிருந்தது.

இதனிடையே, இன நல்லிணக்கப்பாடுகள் இலங்கையில் ஏற்படுத்துவது தொடர்பில் உலகத் தமிழர் பேரவையும், இலங்கையில் உள்ள பௌத்த துறவிகளின் சங்கத்தை சேர்ந்த உறுப்பினர்களும் இணைந்து கடந்த வாரம் வெளியிட்ட ஹிமாலையா பிரகடனம் செவ்வாய்க்கிழமை(12) இலங்கையில் உள்ள அமெரிக்க தூதுவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இனநல்லிணக்கத்துக்கான இந்த ஆரம்ப நடவடிக்கையை தான் வரவேற்பதாகவும், அது இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தும் எனவும் பிரகனடத்தை ஏற்றுக்கொண்ட அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங் தனது உரையில் தெரிவித்திருந்தார்.

## இரண்டு மாதத்தில் 63 ஊடகவியலாளர்கள் படுகொலை

ஊடகவியலாளர்களுக்கு மிகவும் மோசமான ஆண்டாக இந்த வருடம் கடந்து செல்கின்றது. கடந்த வருடம் 61 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டபோதும் இந்த வருடம் பாலஸ்த்தீன - இஸ்ரேல் போரின் போது மட்டும் 63 இற்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என எல்லைகள் அற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு கடந்த வியாழக்கிழமை(14) தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் முதல் 11 மாதங்களில் 45 ஊடகவியலாளர்கள் கடமையை செய்தபோது கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் கடந்த வருடம் இந்த காலப்பகுதியில் 61 பேரே கொல்லப்பட்டிருந்தனர். ஆனால் பாலஸ்த்தீன - இஸ்ரேல் போரில் 63 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த 22 மாதங்களாக இடம்பெற்றுவரும் உக்ரைன்-ரஸ்ய



போரில் 11 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். லத்தீன் அமெரிக்கநாடுகளில்கடந்தஆண்டு 26 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டாலும், இந்த வருடம் அது 6 ஆக வீழ்ச்சி கண்டுள்ளது.

கடந்த வருடம் 65 ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டிருந்தனர் அது இந்த வருடம் 54 ஆக வீழ்ச்சி கண்டுள்ளது. சிறைகளில் இருக்கும் ஊடகவியலாளர்களின் எண்ணிக்கையும் கடந்த ஆண்டு 569 ஆக இருந்தபோதும் இந்த ஆண்டு 521 ஆக வீழ்ச்சி கண்டுள்ளது.

## கிருமி நாசினிகளின் விலை அதிகரிப்பால் திணறும் விவசாயிகள்

திருகோணமலை_தம்பலகாமம் கமநல சேவை பிரிவுக்குட்பட்ட விவசாயிகள் பல இடர்பாடுகளை எதிர்நோக்குவதாக கவலை தெரிவிக்கின்றனர். தற்போது பெரும்போக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் உரிய நேரத்துக்கு உரப் பசளை கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

பாலம்போட்டாறு பகுதியை அண்டிய விவசாயிகள் தங்களது நெற் செய்கையின் போது அரக்கொட்டியான் தாக்கம், ஒரு வகை மஞ்சள் நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளதனால் விளைச்சல் குறைவாகிடுமோ எனவும் அங்கலாய்க்கின்றனர் இதன் காரணமாக அதிக விலையை கொண்ட



எண்ணெயை வாங்கி அடித்தாலும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாகவே காணப்படுவதாகவும் இதனை அதிக விலை கொடுத்து வாங்கி நஷ்டமடைவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பில் உரியகாலத்துக்குஉரமானியங்களை வழங்குமாறும் சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளிடத்தில் கோரிக்கை விடுக்கின்றனர்.

## இந்து சமுத்திரத்தில் அமெரிக்காவால் சீனாவுக்கு ஆபத்து



தாய்வான் போர் ஆரம்பித்தால் இந்துசமுத்திர பிராந்தியத்தால் செல்லும் சீனாவின் எண்ணைக்கப்பல்களை அமெரிக்கா கைப்பற்றும் சாத்தியங்கள் உள்ளதாக அவுஸ்திரேலியாவின் தேசிய பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர் டேவிட் புறுவ்ஸ்ரர் தெரிவித்துள்ளார்.

தினமும் 60 எண்ணைக்கப்பல்கள் பாராசீக வளைகுடா ஊடாக சீனாவின் துறைமுகங்களுக்கு

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## கேணல் தர அதிகாரி உட்பட 115 இஸ்ரேலிய படையினர் காசாவில் பலி

காசா மீது இஸ்ரேலினால் நவம்பர் மாதம் 2 ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்ட படை நடவடிக்கையை தொடர்ந்து கடந்த வியாழக்கிழமை(14) வரையிலும் 115 படையினர் கொல்லப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய தரப்பு தெரிவித்துள்ளது.

நேற்று கொல்லப்பட்டவர்களில் கொலானி இலக்கு காலாட்படை பிரிகேட்டின் கேணல் தர கட்டளை அதிகாரியும் அடக்கம். வடக்கு காசா பகுதியில் இடம்



பெற்ற தாக்குதல்களில் சுயயேயா அகதிமுகாம்பகுதியில்9படையினர்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## வாகரையில் மனித உரிமை தின வாரம் அனுஷ்டிப்பு



சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு அகம் மனிதாபிமான வளநிலையத்தின்( AHRC) ஏற்பாட்டில் வாகரை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாங்கேணி ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் சிவில் அமைப்புக்களினால் செய்வாக்கிழமை (12) மனித உரிமைகள் தின வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு AHRC நிறுவன சிவில் செயற்பாட்டாளர்களினால் டிசம்பர் 04ஆம் திகதி முதல் 12ஆம் திகதிவரை மனித உரிமைகள் தின வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இலக்கை அடையும்வரை சமாதானம் இல்லை – பூட்டீன்



உக்ரைன் மீதான படை நடவடிக்கையின் இலக்கில் மாற்றமில்லை, அதனை அடையும் வரை சமாதானம் என்ற பேச்சுக்கு இடமில்லை என ரஸ்ய அதிபர் விளமிடீர் பூட்டீன் கடந்த வியாழக்கிழமை(14) தெரிவித்துள் ளார்.

எதிர்வரும் வருடம் ரஸ்யாவில் இடம்பெறவுள்ள அரச தலைவருக்கான தேர்தலில் தான் ஐந்தாவது தடவையாக போட்டியிடப் போவதாக கடந்த வாரம் அறிவித்துள்ள பூட்டீன்(71) வருட இறுதி கலந்துரையாடலில் கலந்து கொண்டபோது இந்த கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

# இந்தியாவை கைவிட்ட புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள்

*உலகத்தமிழர்பேரவையின் சில உறுப்பினர்கள் கொழும்பு சென்று இனநல்லிணக்கத்திற்கான பொறிமுறையை பௌத்ததுறவிகளினூடாக ரணிலின் ஆதரவுடன் மேற்கொண்டுள்ளது பல இடங்களிலும் பேசுபொருளாகியுள்ளது. இந்த திட்டம் நேபாளத்தின் நாகர்கொட் நகரத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அந்த நகரத்திலிருந்து பார்த்தால் ஹிமாலையா உட்பட எவரெஸ்ட் மலையில் சூரியன் உதிப்பதை பார்க்க முடியும். ஏப்பிரல் 27 ஆம் நாள் பல்வேறு மதபீடங்களைச் சேர்ந்த 7 பௌத்ததுறைவிகள் மற்றும் இரண்டு பிரதான சங்கநாயக்காவினரின் கையொப்பங்களுடன் இமாலைய பிரகடனம் உருவானது.*



*தமிழர் தரப்பில் உலகத்தமிழர் பேரவையின் பிரித்தானியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.*

*அதன் முதாலவது பிரகனடம் எஸ்.பி.எஸ்.எல் மற்றும் ஜிரிஎப் ஆகியவற்றினால் கூட்டாக கடந்த வியாழக்கிழமை(7) இலங்கை அதிபரிடம் கையளிக்கப் பட்டிருந்தது. இந்த வாரம் அது இலங்கைக்கான அமெரிக்க தூதுவரிடமும் வழங்கப்பட்டுள்ளது. இந்த குழு அண்மையில் அமெரிக்கா சென்று அதிகாரிகளை சந்தித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.*

*ஒரு அமைப்பு நல்லிணக்கத்தை முன்னெடுத்தது இதுவே முதலாவது தடவை. இதற்கு முன்னர் அதனை அரசியல் கட்சிகளே முன்னெடுத்திருந்தன என உலகத்தமிழர் பேரவை சார்பில் கலந்துகொண்ட லண்டனை சேர்ந்த பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.*



*இந்த தீர்மானத்தின் பின்னர் உண்மைகளும், நல்லிணக்கத்திற்குமான சுயாதீன குழு ஒன்றை அமைப்பதாக வெள்ளிக்கிழமை இலங்கை அரசின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. தற்போது அது தயாரிக் கப்படுவதாகவும், அதற்கான கருத்துக்கள் எல்லா தரப்பினரிடமும் இருந்து கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.*

*இந்த தீர்மானத்தின் முக்கிய இலக்கு என்பது முடிவுற்ற போர் தொடர்பான உண்மைகளை கண்டறிதல், இனநல்லிணக்கப்பாடுகளை ஏற்படுத் துதல், பாதிப்புக்களுக்கு இழப்பீடுகளை வழங்குதல் அல்லது தவறுகளை கண்டறிதல், உறுதியான அமைதியை ஏற்படுத்துவதன் மூலம் இலங்கையின் ஒருமைப்பாட்டை பேணுதல் என்பனவாகும்.*

*போரினால் பாதிக்கப்பட்ட எல்லா சமூகங்களுக் கும் ஆதரவு என்பதும் அங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்களும் இனநல்லிணக்கப்பாடும் என்ற முன்னைய நடவடிக்கையையும் மீளாய்வு செய்வதும் தற்போது பரீசீலிக்கப்படுகின்றது.*

*ஆனால் இங்கு எழும் கேள்வி என்னவெனில், இலங்கை தற்போது பொருளாதார வீழ்ச்சியில்*

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# ஈழத்தமிழரின் இறைமைக்கு எதிரான அனைத்துலகத் தீர்வுத் திணிப்பு முயற்சி

2023ம் ஆண்டு உலகில் பல மாற்றங்களை நிகழ்த்திய ஆண்டாகத் தன்னை நிறைவு செய்து கொண்டிருக்கிறது. நியாயமான பன்முனைவுத் தன்மைக்குள் எவ்வாறு அனைவருக்குமான பாதுகாப்பை மேம்பாட்டையும் உறுதி செய்வது என்பது இவ்வாண்டில் அனைத்துலக மட்டத்தில் பெரிதும் சிந்திக்கப்பட்ட விடயமாகவுள்ளது. இதுவரை இருந்து வந்த அதிஉயர் நாடாக ஒருநாடு மற்றைய நாடுகளை அதிகாரப்படுத்துகின்ற படிநிலை (Hierarchy) உலக அரசியல் அதிகாரமுறைமை மாற்றப்பட்டு எந்த ஒருநாடும் தேவைக்கேற்ப மற்றைய நாட்டினை அந்நாட்டின் விருப்பின் பேரில் அதிகாரப்படுத்துகின்ற அதிகாரமற்ற பரவல்நிலை (Heterarchy) என்ற புதிய அரசியல் அதிகார முறைமை பொருளாதாரத் தேவைகளின் அடிப்படையில் தோற்றம் பெற்று வருகிறது.

இதுவே சிறிலங்காவுக்குள் இந்திய சீன அமெரிக்க நாடுகளை மட்டுமல்ல உலகின் பலநாடுகளையும் கொண்ட கூட்டு பொருளாதார அதிகாரப்படுத்தலை சிறிலங்கா அனுமதித்து தன்னை தனது வங்குரோத்து நிலையில் நின்று செயற்கையான முறையில் விடுவித்து அனைத்துலக நாணய நிதியத்தின் இரண்டாம் தவணைக்கான கடனுதவியை உறுதிப்படுத்த உதவியுள்ளது. இது செயற்கையான முறையில் சிறிலங்காவினை பொருளாதார வங்குரோத்து நிலையில் இருந்து வெளிவர உதவினாலும் ஏற்றுமதி விரிவாக்கங்களோ அல்லது தனியார் படுகடன்கள் கட்டப்பெறும் நிலைகளோ இல்லாமல் சிறிலங்கா மீளவும் பொருளாதார வங்குரோத்துக்குள் செல்லும் என்பது நடைமுறை உண்மையாகவுள்ளது. இந்நிலையில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களின் சிறிலங்காவுக்கான சுற்றுலாக்கள் அதன் பொருளாதார மீளுருவாக்கத்திற்கான நியாயமான பலமாக உள்ளது என்பதால் இதே புலம்பெயர் ஈழத்தமிழர்களை சிறிலங்காவுக்குள் மூலதனமிடச் செய்வதன் மூலம் சிறிலங்கா தனது மூலதனத்தை விரைவாகப் பெருக்கலாம் என்கின்ற அடிப்படையில் இன்றைய சிறிலங்கா ஜனாதிபதி புலம்பெயர் ஈழத்தமிழர்களுடனான தொடர்புகளை மீட்டுருவாக்கம் செய்யும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றார்.

ஆயினும் ஈழத்தமிழர்கள் சிங்களவர்கள் ஒருங்கிணைப்பு என்பது இலங்கையில் வாழும் ஈழத்தமிழர்களின் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளை அவர்களின் இலங்கைத் தீவு மேலான இறைமையின் அடிப்படையில் சமத்துவமாகவும் சகோதரத்துவமாகவும் சுதந்திரமாகவும் சிங்களவர்கள் ஏற்பது என்பதன் மூலமே நடைமுறைச் சாத்தியமாகும். இதற்கு முன்நிபந்தனையாக சிறிலங்கா தான் ஈழத்தமிழர்களை இனஅழிப்பு செய்தது-செய்கிறது என்பதை ஒப்புக்கொண்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் இனஅழிப்பால் பாதிக்கப்பட்டோர்க்கான பரிகாரநீதியையும் இனஅழிப்பைச் செய்தவர்களுக்கான தண்டனை நீதியையும் நடைமுறைப்படுத்தல் அமைகிறது. கூடவே ஈழத்தமிழர்கள் தங்களின் இறைமையின் அடிப்படையில் தங்களின் வரலாற்றுக்கு முற்பட்ட தாயகத்தில் தங்களுக்குள்ள தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையின் அடிப்படையில் தங்களின் தேசத்தை மீள்நிர்மாணம் செய்வது பிரிவினையல்ல என்பதையும் இதனை எதிர்த்து ஈழத்தமிழர்களைத் தேசமாகவே இனப்படுகொலை செய்யும் இனஅழிப்புக்கு எதிராக ஈழத்தமிழர்கள் மேற்கொள்ளும் எதிர்வினைகள் பயங்கரவாதமல்ல தேசிய விடுதலைச் செயற்பாடுகள் என்பதையும் சிறிலங்காவும் இந்தியாவும் உலக நாடுகளும் ஏற்கின்ற நிலையிலேயே இலங்கைத் தீவின் இருதேச இனங்களான தமிழ் சிங்கள தேச இனங்களும் வர்த்தகத்தின் வழி குடிகளான முஸ்லீம் மக்களும் தொழில் முயற்சி வழி குடிகளான மலையக மக்களும் இலங்கைத் தீவின் பொருளாதாரத்தையும் பிறநாடுகளில் இருந்து பாதுகாப்பதையும் எவ்வாறு எந்த ஆட்சி முறைமைக்குள் கூட்டொருங்கு செயற்பாட்டால் தீர்க்கலாம் என்று ஆராய முடியும். இதற்கான ஆரம்பக்கட்டப் பேச்சுக்கள் கூட ஈழத்தமிழ் மக்களின் 1977 ம் ஆண்டு குடியொப்பத்தால் நிறைவேற்றப்பட்ட மக்களாணையாகிய தனிநாட்டிலேயே தங்களுக்கான பாதுகாப்பான அமைதியான ஆட்சி கிடைக்கும் என்ற அடிப்படைக் கொள்கைக்கு எந்தக் குந்தகமும் ஏற்படாது சிறிலங்காவாலும் அதன் ஆதரவு வல்லாண்மை பிராந்திய வல்லாண்மைகளாலும் 2009 இல் முள்ளிவாய்க்கால் இனஅழிப்பால் பின்னடைவுக்குள்ளாக்கப்பட்ட ஈழத்தமிழரின் நடைமுறையரசை மீளவும் அமைதியான முறையில் மீள்விப்பதை முன்னெடுத்து சிறிலங்காவுடன் பேச்சுக்களாலேயே எவ்வாறு இலங்கைத் தீவில் உள்ள மற்றைய தேச இனத்துடனும் குடிமக்கள் உடனும் அமைதி வழியில் இலங்கைத் தீவின் பொருளாதார வீழ்ச்சிக்கு ஈழத்தமிழர்களும் புலம்பெயர் தமிழர்களும் இணைந்து எதிர்வினைகளை அமைக்கலாம் என்பதே இன்று சிந்திக்கப்பட வேண்டிய விடயம்.

இதனை விடுத்து புலம்பெயர் ஈழத்தமிழர்களால் தாயகத்தமிழர்களின் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளை அவர்கள் வென்றெடுக்கவென உருவாக்கப்பட்டு அந்த விடயத்தில் சோரம்போய் தன்னலத்தில் இலங்கைக்குள் மேலாதிக்கம் செலுத்த விரும்பும் நாடுகளில் தங்கிச் செயற்படும் தன்மையினால் புலம்பெயர் தமிழர்களால் நிராகரிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட உலகத் தமிழர் பேரவையின் தலைவர் சுரேன் சுரேந்திரனையும் அதன் மற்றைய சில உறுப்பினர்களையும் அவர்கள் சார்ந்துள்ள நாடுகள் துணையுடனும் இந்திய மற்றும் சிறிலங்காப் பாராளுமன்றக் கட்சியான தமிழரசுக்கட்சியின் நெறிப்படுத்தலிலும் சிறிலங்கா நேப்பாளத்தின் தலைநகரமான கத்மாண்டில் தனது பௌத்த தேரர்களில் சிலரை சந்திக்க வைத்து எவ்வாறு ஒரே நாடு சிங்கள நாடு ஒரே சட்டம் பௌத்த ஆகமச் சட்டம் என்ற மகிந்த கோத்தபாய ரணில் திட்டத்தை இந்த உலகத் தமிழர் பேரவை ஏற்கிறது என்பதை உலகுக்கு வெளிப்படுத்த இமாலாயப் பிரகடனம் என்கின்ற ஈழத்தமிழர்களின் இறைமையை இல்லாதொழித்து சிறிலங்காவின் இறைமைக்குள் ஈழத்தமிழர்களுக்கான அரசியல் தீர்வைத் திணிக்கின்ற வேலையைச் சில அனைத்துலகநாடுகள் இணைந்து செய்துள்ளன. இந்த மாதத்தில் அந்த இமாலயப் பிரகடனத்தை இலங்கைக்குப் போய் பௌத்த மகாசங்கத்தவர்களின் காலிலும் சிறிலங்கா ஜனாதிபதியின் காலிலும் விழுந்து முன்னாள் ஜனாதிபதியான மகிந்தாவின் காலிலும் விழுந்து அவர்களுக்குப் பாதபூசை செய்து அவர்களுக்குச் சமர்ப்பித்துள்ளனர். இலங்கையிலுள்ள அமெரிக்க பிரித்தானிய சுவிஸ் யப்பான் மற்றும் நாடுகளின் தூதுவர்களையும் சந்தித்துள்ளனர். இது ஈழத்தமிழர்களின் இறைமையை ஒடுக்கி சிறிலங்கா அரசும் அதன் ஆதரவு வல்லாண்மை மேலாண்மை நாடுகளும் இணைந்து ஈழத்தமிழர்களை வெறும் மக்கள் சமூகமாக மாற்றி ஈழத்தமிழர்களின் மேல் அவர்கள் விருப்பப்படாத தீர்வைத் திணிக்கின்ற கூட்டுச் சதிமுயற்சியாகும். இதனை இலக்கு வன்மையாகக் கண்டிப்பதுடன் இதனைத் தடுப்பதற்கான கூட்டொருங்குச் செயற்பாட்டுக்கு உலகெங்கும் உள்ள ஈழத்தமிழர்கள் ஒருங்கிணைந்து உடனடியாகச் செயற்பட வேண்டுமென்பது இலக்கின் இவ்வார அழைப்பாகவும் உள்ளது.

**ஆசிரியர்**

# தேர்தல் ஆண்டுக்கு தயாராகும் கட்சிகள்

2023 முடிவுக்கு வரவுள்ள தருணத்தில், கிறிஸ்மஸ் புதுவருட விடுமுறை காலம் நெருங்க அரசியல் நடவடிக்கைகளின் தீவிரம் குறையும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. மாறாக, முக்கிய அரசியல் கட்சிகள் மக்கள் மத்தியில் முக்கிய இடத்தைப் பிடிக்கவும், பொதுமக்களின் மனதையும் வெல்வதற்காகவும் தீவிரமாகச் செயற்படத் தொடங்கியிருக்கும் ஒரு நிலையைத்தான் பார்க்க முடிகின்றது.

2024 தேர்தல் ஆண்டாக அமையப்போகிறது என்பதே இதற்குக் காரணம். அரசியலமைப்பின்படி, ஜனாதிபதித் தேர்தல்கள் 2024 அக்ரோபர் நடுப்பகுதிக்குள் நடத்தப்பட வேண்டும். இதன்படி அதற்கான வேட்பு மனுக்கள், அடுத்த ஆண்டு செப்ரெம்பர் தொடக்கத்தில் ஏற்கப்பட வேண்டும். ஆனால், ஜனாதிபதித் தேர்தல் முன்கூட்டியே நடக்குமா என்பது ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாட்டில்தான் தங்கியிருக்கின்றது.



ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகள் எதுவாக இருந்தாலும் - தற்போதைய ரணில் விக்கிரமசிங்க மீண்டும் தெரிவு செய்யப்பட்டாலும் - புதிய பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் ஆண்டில் நடைபெற வேண்டியதில்லை. 2025 ஒகஸ்ட்டில்தான் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். என்றாலும் கூட, ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து பொதுத் தேர்தல் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

ஜனாதிபதித் தேர்தலில் முன்னணி போட்டியாளர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, மற்றும் ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஆகிய மூவரும்தான் உள்ளார்கள். இன்னும் பலர் வேட்பாளர்களாக களம் இறங்கலாம் என ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. சம்பிக்க ரணவக்க, சரத் பொன்சேகா மற்றும் வர்த்தகர்களான தம்மிக்க பெரேரா மற்றும் திலித் ஜயவீர ஆகியோர் களமிறங்குவதற்கு திட்டமிட்டு வருகின்றார்கள். அவர்களில் யாருக்காவது வெற்றி வாய்ப்பு உள்ளதா என்பது சந்தேகமே.

மூன்று முன்னணி வேட்பாளர்களில், சஜித் பிரேமதாஸ, மற்றும் அனுர குமார திசாநாயக்க இருவரும் ஏற்கனவே அந்தந்த அரசியல் கட்சிகளால் வேட்பாளர்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்னும் தனது நோக்கத்தை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. இது தொடர்பில் அவரிடம் நேரடியாகக் கேள்வி கேட்டபோது, தேர்தல் கால அட்டவணையில் நடைபெறும் என்று தெரிவித்து, கேள்விக்கு பதிலளிக்காமல் அவர் அதனை திசைதிருப்பினார்.

ஜனாதிபதி தனது நான்கரை தசாப்த கால அரசியல்வாதியாக ஒரு உயர்ந்த இடத்திலிருந்துகொண்டுதான் தனது அரசியல் வாழ்க்கையை முடித்துக் கொள்ள விரும்புவார் என்பது பொதுவான கருத்து. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மக்கள் போராட்டங்களைத் தொடர்ந்து ராஜினாமா செய்ததன் பின்னர், அவரது மிகுதிக் காலத்துக்கு ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டவர்தான் ரணில் விக்கிரமசிங்க. அதனால், மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக ஓய்வுபெறுவதைத்தான் அவர் விரும்புவார். இப்போது, அதிகாரம் அவரிடம் இருப்பதால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலை தனக்கு வாய்ப்புக்கள் உள்ள ஒரு நேரத்தில் நடத்துவதைத்தான் அவர் விரும்புவார்.

விக்கிரமசிங்க ஒரு அரசியல் தந்திரசாலி என்ற பெயரையும் பெற்றுள்ளார். எந்தவொரு உத்தியோகபூர்வ அறிவிப்பையும் தாமதப்படுத்துவதற்கான ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் தீர்மானத்தில் செல்வாக்கு செலுத்தக்கூடிய ஒரு காரணி அவரது கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் (UNP) தற்போதைய நிலையாகும். கடந்த 2020 பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தனி ஒரு ஆசனம்தான் பாராளுமன்றத்தில் கிடைத்தது. அதுவும் தேசியப் பட்டியல் மூலமாக.

மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளதாகக் காட்டிக்கொள்ளும் ஜனாதிபதி, ஐக்கிய தேசியக் கட்சிக்கு புத்துயிர் அளிக்கும் பணியை தமது கட்சி முக்கியஸ்தர்களிடம் ஒப்படைத்துள்ளார். அது ஒரு கடினமான வேலையாக இருக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சி தனது பழைய புகழையும் இன்னும் பெறவில்லை என்பது ரணில் விக்கிரமசிங்கவை வாட்டும் ஒரு பிரச்சினை.

பொருளாதாரநெருக்கடியைவெற்றிகரமாக எதிர்கொண்டவர் எனக் காட்டிக்கொள்வதன் மூலமாக வெற்றிப் பாதையில் அடியெடுத்து வைக்க முடியுமா என்பதும் ரணிலை வாட்டும் மற்றொரு கேள்வி. அதனைவிட, ஐ.தே.க.வை மட்டும் நம்பி களமிறங்கவும் அவர் தயாராகவில்லை. அந்தளவுக்கு பலமானதாக ஐ.தே.க. இல்லை. அதனால்தான், தான் ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடுவதையிட்டு பகிரங்கமாக அறிவிக்க அவர் இன்றுவரை தயங்குகின்றார்.



வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு, ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு வெளியே உள்ள அரசியல் சக்திகளின் ஆதரவு தேவைப்படுகின்றது. சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் சில பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து அவர் இந்த நோக்கத்தை முன்னெடுத்து வருகின்றார் என்பதும் இரகசியமல்ல. பொது ஜன பெரமுன பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்ட கட்சி என்பதால், அவசியத்தின் பேரில், ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

**அகிலன்**

பொதுஜன பெரமுனவின் அமைச்சர்கள் சிலர், குறிப்பாக அமைச்சரவை அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டவர்கள், அரசாங்கக் கொள்கையின் எல்லைக்குள் சுயாதீனமாகச் செயற்படுவதற்கு அனுமதித்த ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் ஆட்சி பாணியில் ஈர்க்கப்பட்டுள்ளார்கள். ஆனால், ராஜபக்ஷக்களில் சிலர், பொதுஜன பெரமுன தனியாக தேர்தல் களத்தில் இறங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார்கள். நேற்று வெள்ளிக்கிழமை (டிசெம்பர் 15) கொழும்பில் நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் மாநாடு அவர்களுடைய பலத்தைக் காட்டுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒன்று.



இதன் தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்ற மஹிந்த ராஜபக்ஷ எடுக்கப்போகும் நிலைப்பாடும் முக்கியமானதாக இருக்கும். ரணில் மீண்டும் ஜனாதிபதியாக வருவதை அவர் விரும்பலாம் எனத் தெரிகின்றது. ராஜபக்ஷக்களால் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது என்ற நிலையில், சஜித் வருவதைவிட, ரணில் பதவியைத் தொடர்வது தமக்கு சாதகமானது என மஹிந்த கருதலாம். பொதுஜன பெரமுனவில் சிலர் விக்கிரமசிங்கவை ஒரு சாத்தியமான 'பொது' வேட்பாளராக பகிரங்கமாக முன்னிறுத்தி வருகின்றனர். எவ்வாறாயினும், இது தொடர்பாக பொதுஜன பெரமுனவின் உத்தியோகபூர்வ பதில் எதுவும் வரவில்லை.

கடந்த பொதுத் தேர்தலில் பொது ஜன பெரமுனவின் 145 ஆசன வெற்றிக்கு பங்களித்த பல பாராளுமன்ற உறுப்பினர்கள் இப்போது 'சுயேச்சை' உறுப்பினர்களாக செயல்படுகின்றனர். டலஸ் அழகப்பெரும மற்றும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தலைமையிலான தரப்பினரும், விமல் வீரவன்ச, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோரின் தலைமையிலான அணிகளும் இதில் அடங்கும். "அரகலய"வுக்குப் பின்னர் ராஜபக்ஷக்களுக்கு எதிராக அவர்கள் இந்த நிலைப்பாட்டை எடுத்தார்கள்.

கடந்த ஆண்டு ஜனாதிபதி பதவியில் இருந்து கோட்டாபய ராஜபக்ச ராஜினாமா செய்வதற்கு வழிவகுத்த நிகழ்வுகளைத் தொடர்ந்து, அவர்கள் பொதுஜன பெரமுனவில் இருந்து போட்டியிட்டால், மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவாக இருக்கும் என்று இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கருதுகின்றனர். அதனைவிட, பொருளாதார குற்றவாளிகளாக ராஜபக்ஷக்கள் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் அறிவிக்கப்பட்டமை அவர்களுடைய இந்த

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# இமயமலைப் பிரகடனத்தை தமிழரசுக் கட்சி ஏற்கிறதா?

## கேள்வி எழுப்பும் சுரேன் குருசுவாமி



**உலகத் தமிழர் பேரவை என்ற அமைப்பு இலங்கை வந்து நடத்திய சந்திப்புக்கள் கடந்த ஒரு வாரகாலமாக இலங்கைச் செய்திகளில் முக்கிய இடத்தைப் பெற்றது. திடீரென கொழும்பு வந்து இமயமலைப் பிரகடனம் என்ற பெயரிலான ஆவணம் ஒன்றை வைத்துக்கொண்டு அவர்கள் நடத்திய பேச்சுக்கள் சர்ச்சைகளையும் ஏற்படுத்தியது. தமிழ்க் கட்சிகளில் பெரும்பாலானவை இந்த அமைப்பை சந்திப்பதற்கும் மறுத்துவிட்டன. இந்த நிலையில் உலகத் தமிழர் பேரவையின் நிகழ்ச்சி நிரல் என்ன, அரசியல் அரங்கில் இவர்களால் தாக்கம் எதனையாவது ஏற்படுத்தக்கூடியதாக இருக்குமா, பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் இவர்களை சந்திக்க மறுத்தது ஏன், என்பன போன்ற பல விடயங்களையிட்டு றெலோ அமைப்பின் தேசிய அமைப்பாளரும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரமுகருமான குருசுவாமி சுரேந்திரன் உயிரோடைத் தமிழின் தாயக களம் நிகழ்வுக்கு வழங்கிய செவ்வியில் தமது கருத்துக்களை முன்வைத்தார். இதிலிருந்து முக்கியமான பகுதிகள் இலக்கு வாசகர்களுக்காக**

**உலகத் தமிழர் பேரவையின் விஜயத்தை நீங்கள் விமர்சித்திருந்தீர்கள், அவர்களை சந்திப்பதற்கும் மறுத்துவிட்டீர்கள். இவற்றுக்கு என்ன காரணம்?**

முதலாவதாக, தமிழர்களின் இன்றைய பிரச்சினைகளான நீதிப் பொறிமுறை, அரசியல் தீர்வு, பொருளாதார அபிவிருத்தி ஆகிய மூன்று விடயங்களையிட்டும் புலம்பெயர்ந்த உறவுகளின் ஆதரவு இல்லாமல் நாம் வெற்றி கொள்ள முடியாது. ஆனால், அந்த புலம்பெயர்ந்த உறவுகளின் செற்பாடுகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்றால், இங்கு களத்தில் இருக்கின்ற மக்களின் பிரதிநிதிகளின் கூட்டு முயற்சிகளுக்கு சர்வதேசத்தின் ஆதரவைப் பெற்றுக்கொடுப்பதாகவே இருக்க வேண்டும். இங்கிருக்கக்கூடிய அரசியல் சக்திகளுக்கு அல்லது மக்கள் பிரதிநிதிகளுக்கு பதிலீடாக அவர்கள் களமிறங்க முடியாது. அரசாங்கத்துடன் அவர்கள் இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் பேசுவது அந்தப் பிரச்சினைகளைத் திசைதிருப்புவதாகவே இருக்கும்.

இரண்டாவதாக, காணி அபகரிப்புக்கு எதிராகவும், பயங்கரவாதத் தடைச்ச ட்டத்தை நீக்கக்கோரியும் வடக்கு, கிழக்கு தழுவியதாக பாரிய கதவடைப்புப் போராட்டம் ஒன்றை நாம் அண்மையில் நடத்தியிருந்தோம். புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள அமைப்புக்கள் பலவும் அந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்திருந்தன. இது பெரிய தாக்கம் ஒன்றை சர்வதேசத்திலும், உள்ளூரிலும் ஏற்படுத்தியிருந்தது. இது போன்ற மனித உரிமைகள் விடயங்களிலும் அவர்கள் எம்முடன் இணைந்து பணியாற்றுவது, அந்த முயற்சிகளுக்கு பலத்தைச் சேர்ப்பதாக இருக்கும்.

ஆனால், அவர்கள் தனித்து யாரோ அடையாளம் தெரியாத ஒரு சில பௌத்த பிக்குகளையும் இணைத்துக்கொண்டு கடந்த ஏப்ரல் மாதம் காட்மண்டுவில் பேச்சுவார்த்தைகளை நடத்திவிட்டு ஒரு பிரகடனத்தை உருவாக்கி - அந்தப் பிரகடனத்தை இங்கிருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகளுடன் கொஞ்சம் கூட பேச்சுவார்த்தை நடத்தி இதனுடைய சாராம்சங்கள் பொருத்தமானவையா, இவை குறித்து அரசுடன் பேச்சுக்களை நடத்த முடியுமா என எதனையும் ஆராயாமல் நேரடியாக அதனைக் கொண்டுவந்து அரச தரப்பிடம் வழங்கிய பின்னர் மக்கள் பிரதிநிதிகளிடம் அதனையிட்டு ஆராய வாருங்கள் என அழைப்பது இங்கிருக்கக்கூடிய அரசியல் பிரதிநிதிகளை நிராகரித்ததாகவும், அவர்களுடைய செற்பாட்டை மலினப்படுத்துவதாகவும் உதாசீனம் செய்வதாகவும் இருப்பதாகவே நாங்கள் அவதானித்திருந்தோம்.

அதனால், இந்த செயற்பாட்டை நாம் நிராகரிப்பதோடு, இந்த முயற்சியானது மிகப் பெரிய ஆபத்தான ஒரு சூழ்நிலையை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்திக்கொடுத்துவிடும் என்பதில் நாங்கள் அவதானமாக இருந்தோம். அதனால்தான் நாம் அதனைக் கண்டித்திருந்தோம்.

அவர்கள் வெளியிட்ட இமயமலைப் பிரகடனம் என்பது தமிழ் மக்களுடைய அரசியலை படுபாதாளத்துக்குக் கொண்டு செல்வதாகவே அமைந்திருக்கின்றது. பிரேரணையை அவதானித்தால், மாகாண சபைகளுக்கான அதிகாரத்தை பகிர்வதற்கு புதிய அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற தோரணையில் அவர்கள் கருத்து வெளியிட்டிருந்தார்கள். ஏற்கனவே இருக்கக்கூடிய அரசியலமைப்பில் உள்ள அதிகாரங்களைப் பகிர்வதற்கு புதிய அரசியல் யாப்பு தேவையில்லை.

புதிய அரசியல் யாப்பு ஒன்று உருவாக்கப்படுமாக இருந்தால், அதில் சமஷ்டி என்பது உள்ளடக்கப்பட வேண்டும் என்பதற்கான கோரிக்கையை முன்வைக்க வேண்டியவர்களாகவே நாம் இருக்கின்றோம். அதுதான் எமது இனத்துக்காக நாம் செய்யக்கூடிய அரசியல் கடமையாக இருக்க முடியும். அந்த அரசியல் நுணுக்கங்களைப் புரிந்துகொள்ளாமல் தான்தோன்றித்தனமாக புத்த பிக்குகளை சந்தோஷப்படுத்துவதற்கோ அல்லது தமது நிகழ்ச்சி நிரலுக்காகவோ - மாகாண சபைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அல்லது அதற்கான அதிகாரங்களைப் பகிர்வதற்கு புதிய அரசியலமைப்பு தேவை என அவர்கள் கூறியிருப்பது அவர்களின் அரசியல் தெளிவற்ற நிலைப்பாட்டைத்தான் வெளிப்படுத்துகின்றது.

இவ்வாறான பிரகடனங்களைத் தயாரித்துக்கொண்டு பெரும்பான்மையினரிடம் செல்வது நாம் முன்னெடுக்கும் அனைத்துவிதமான செயற்பாடுகளையும் குழிதோண்டிப் புதைப்பதாகவே அமைந்துவிடும். உண்மையில் இவர்கள் ஒரு பெரிய அமைப்பும் அல்ல. ஒருசிலர் இருந்துகொண்டு அமைப்பு ஒன்றின் பெயரைப் பயன்படுத்தி இவ்வாறு செயற்படுகின்றார்கள். இவர்களுக்கு தாம் செயற்படும் நாட்டில் கூட ஆதரவில்லை. ஆகவே, இவர்களைக் கட்டுப்படுத்த வேண்டிய கடப்பாடு எமக்கு இருப்பதால், அதனை நாம் கடுமையாக விமர்சித்திருந்தோம்.

**இமயமலைப் பிரகடனம் என்ற அவர்களுடைய ஆவணத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எந்தவகையில் பயன் படுத்திக்கொள்வார் என நினைக்கின்றீர்கள்?**

அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு ஜனாதிபதி கடந்த வருடம் அழைத்திருந்தார். அவருடன் அந்தப் பேச்சுக்கு நாம் சென்றிருந்தால், "பாராளுமன்றத்தில் இப்போது எமக்குப் பெரும்பான்மை இல்லை. நான் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவாகி வந்தபின்னர் இந்த அரசியல் தீர்வுக்கான முயற்சிகளை முன்னெடுப்போம்" என ஒரு இழுத்தடிப்படை ஜனாதிபதி மேற்கொண்டிருப்பார். அதனால் நாம் புத்திசாலித்தனமான முறையில், ஒரு நிலையான பாராளுமன்றமும், மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியும் வந்த பின்னர் அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களை நாம் ஆரம்பிக்கலாம், அது

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

# சிறந்த பெண் தொழில் முயற்சியாண்மையாளருக்கான விருதினை பெற்ற பெண்மணியின் வெற்றிக் கதை

## ஹஸ்பர் ஏ ஹலீம்

"உயர்தரம் கற்றபின் வீட்டில் சும்மா இருந்து விடக்கூடாது என்பதற்காக ஒரு பேக் கம்பனியில் வேலைக்கு சென்றேன். அங்கு அவர்கள் தைப்பதை பார்த்து பழகிய நான் ஒரு மாதமும் 10 நாட்களுமே வேலை செய்ய கூடிய வாய்ப்பு கிட்டியது. ஏனெனில் எனது கணவர் வேலைக்கு செல்வதை நிறுத்துமாறு கேட்டிருந்தார் அதனால் விலகினேன்" என திருகோணமலை முள்ளிப்பொத்தானை சேர்ந்த இயந்திரம் மூலமான பை உற்பத்தியாளரான எம்.ஆர்.பிஸ்ரியா எனும் சுயதொழில் முயற்சியாண்மையாளர் தெரிவித்தார்.





குறித்த பெண்மணி தையல் இயந்திரங்கள் மூலமாக பல பாடசாலை பைகள்,பெண்களுக்கான பைகள் என பல வகையான டிசைன்களில் உற்பத்தி செய்வதுடன் கடை ஒன்றை வைத்து கூலியாட்கள் வைத்து உற்பத்தியில் ஈடுபட்டு வருகிறார். சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு (2023) மகளிர் விவகார அமைச்சின் மூலமாக நடாத்தப்பட்ட சிறந்த பெண் தொழில் முயற்சியாளருக்கான விருதினையும் திருகோணமலை மாவட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளார்.

"ஆரம்பத்தில் 2500 ரூபாவை முதலாக கொண்டு ஆரம்பித்த எனது தொழில் தற்போது 10 இலட்சம் வரையாக அதிகரித்துள்ளது இதன் மூலமே மூலதனப் பொருட்களை கொள்வனவு செய்து தொழிலை நல்ல முறையில் கொண்டு செல்கிறேன். ஆரம்பத்தில் வேலையை விட்டு விலகுமாறு எனது அன்புக் கணவர் கூறினார் பின்னர் ஆறு மாதங்களாக வீட்டில் சும்மா இருந்தேன். ஆனால் எனக்கு சும்மா இருக்க முடியாது என கணவரிடம் அடம்பிடித்தேன். பின்னர் தையல் மெசின் ஒன்றை வாங்கித் தந்தார். அதன் மூலமாக துணி வகைகளை கொண்டு முதலில் சிறிய சிறிய பைகளை தைத்துப் பழகினேன்" என சிறிய நடுத்தர தொழிலில் ஈடுபடும் குறித்த பெண்மணி கூறினார்.



பிஸ்ரியாவின் சொந்த ஊர் கண்டி திருகோணமலை முள்ளிப்பொத்தானையில் திருமணம் செய்து கொண்டார். மூன்று ஆண் பிள்ளைகளுக்கு தாயான இந்த பெண்மணி வாழ்க்கையில் பல தடைகளை தாண்டி முன்னேறியுள்ளார். பல சவால்களுக்கும் முகங்கொடுத்துள்ளார். ஆரம்ப காலத்தில் தனது தொழிலை தொடங்கிய பின் சிறிய வருமானமீட்டல் ஊடாக ஜூகி தையல் இயந்திரத்தை கொள்வனவு செய்து படிப்படியாக முன்னேறி தனது உற்பத்திகளை பாரிய சந்தைப்படுத்தலுக்கு உட்படுத்தி தானே தன்னகத்தே வருமானத்தை அதிகரித்து கொண்டார். தற்போது தனது பை உற்பத்தி கடையில் ஆறு பெண் ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

"சந்தைப்படுத்துவதில் பல சிரமங்களை முதலில் எதிர் கொண்ட நிலையில் தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் சிறு கைத்தொழில் உற்பத்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிய திருமதி சேகரி என்பவர் எனது வீட்டுக்கு வந்து என் உற்பத்திகளை பார்வையிட்டார் அதன் பின் சந்தை வாய்ப்பை ஏற்படுத்தி தந்தார்"



இக்கட்டான சூழ் நிலையில் இத்தொழிலில் முன்னேற வேண்டும் என நினைத்த குறித்த பெண்மணி கணவனின் வெறுப்பு பேச்சான தொழில் செய்ய கூடாது போக வேண்டாம் என்ற உணர்வினை வைத்து தடைகளை உடைத்தெறிந்து ஒரு சிறந்த தையல் பயிற்சி வளவாளராகவும் தற்போது திறம்பட செயற்பட்டு வருகிறார்.

"கண்டியில் அவ்வப்போது குடும்பத்தில் இது வரைக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த போது நால்வர் மரணித்தார்கள். உடனடியாக மரண வீட்டுக்கு இங்கிருந்து சென்றேன் பல கவலைகள் நிறைந்த அந்த சோகமான நேரத்திலும் மன முடைந்து போகவில்லை.

தொழிலை விடவில்லை எனது தொழில் முயற்சிகளை கண்டு கொண்ட USAID நிறுவனத்தினர் ஐந்து இயந்திரங்களை வழங்கி யுள்ளார்கள் இதன் மூலம் ஆறு இளம் பெண் யுவதிகளுக்கு தொழில் வழங்கியுள்ளேன்"

தனது திறமை விடா முயற்சி மூலமாக ஆரம்பத்தில் சந்தை வாய்ப்பு கிடைக்கவில்லை என்பதற்காக தொழிலை விட்டுவிடாமல் தன் னம்பிக்கை மூலமாக முன்னேற வேண்டும் என நினைத்து அந்த நாள் ஞாபகத்தோடு தற்போது பல பயிற்சி நிலையங்களில் வளவாளராக தனது திறமையை வெளிப்படுத்தி பல ரூபாக்களை மாத வருமானங்களாக பிஸ்ரியா பெற்று வருகிறாள்.

தனது வீடானது சிறிய வீடாக இருந்தது. மழை காலங்களில் அதிக காற்று வீசிகின்ற போது ஒரு முறை மரம் முறிந்து வீட்டின் மீது விழுந்ததால் ஒரு பகுதி நொறுங்கியது. சில தையல் உபகரணங்களும் சேதமாக்கப்பட்டன. இதனால் ஒரு தொகை பணம் தேவைப்பட்டது. குறித்த பணம் கிடைக்காததால் வங்கியில் கடனுக்காக விண்ணப்பம் செய்யப்பட்ட போது வங்கியால் பல நிபந்தனைகளை முன்வைத்து விண்ணப்பம் கிடைக்கப் பெற்று நிராகரிக்கப்பட்டதாகவும் இங்கு பகிர்ந்து கொண்டார்." அரச வங்கிகளில் கடன்களை பெறுவது மிகவும் கடினம்" எனவும் கூறினார்.



தனது சுயதொழில் மூலமாக வருமானத்தை ஈட்டிக்கொண்ட படியாக ஒரு இளமானிப் பட்டத்தையும் நிறைவு செய்து கொண்டார். அதன் பின் தையல் பயிற்சியில் தேசிய தொழிற் தகைமை மட்டம் iv உம் பூர்த்தி செய்த நிலையில் தொழில்வாண்மை தகைமையையும் தன்னகத்தே வைத்துக் கொண்ட இந்த பெண்மணி திருகோணமலை மாவட்டத்தில் உள்ள அரச அரச சார்பற்ற தையல் பயிற்சி நிலையங்களுக்கு ஒரு வளவாளராகவும் தன்னை தயார்படுத்தி கொண்டு மேலதிகமான வருமானம் ஈட்டல் என்றவகையில் மாத வருமானமாக 50 ஆயிரம் ரூபாவுக்கும் மேலாக இலாபத்தை தேடிக் கொள்கிறார்.

சுறு சுறுப்பான நடை பாவனை உரத்த

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# மாடுகளை கொல்லுவோர் நாளை மனிதர்களையும் கொல்லுவார்கள்

மட்டு.நகரான்

எங்கள் உயிர் இருக்கும் வரையில் மயிலத்தமடு,மாதவனை பகுதியை யாருக்கும் விட்டுக்கொடுக்கமாட்டோம். அந்த பகுதி எங்கள் சொத்து. அதனையாரும்அபகரிக்க விடமாட்டோம் என்று மட்டக்களப்பின் மயிலத்தமடு,மாதவனை பண்ணையாளர்களின் குடும்ப உறவினர்கள் தெரிவிக்கின்றனர். நாங்கள் எங்கள் உறவுகளின் போராட்டத்திற்கு என்றும் உறுதுணையாக இருப்போம் என்றும் தெரிவிக்கின்றனர்.

வடகிழக்கில் இதுவரையில் நடைபெற்ற போராட்டங்கள் எல்லாம் ஏதாவதொரு வகையில் தனிப்பட்டவர்கள் இணைந்து அல்லது கிராமங்கள் இணைந்து அல்லது தமிழ் தேசிய வாதிகள் இணைந்து என பல்வேறு தரப்பினர் இணைந்து முன்னெடுத்த போராட்டமாகவேயிருந்துவந்தது.



ஆனால் முதன்முறையாக மயிலத்தமடு,மாதவனை மேய்ச்சல் தரையை மீட்டுத் தருமாறு கோரி முன்னெடுக்கப்படும் போராட்டமானது கால்நடை பண்ணையாளர்களின் குடும்ப உறுப்பினர்களின் போராட்டமாக மாற்றம் பெற்று நிற்கின்றது.

இந்த நிலையில்90 நாளை பூர்த்திசெய்துள்ள கால்நடைபண்ணையாளர்களின்போராட்டமானது தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது.பொலிஸ் துறை, நீதித்துறை,அரச துறை உட்பட அனைத்து துறைகளும் பண்ணையாளர்களை கண்டுகொள்ளாத நிலையிலேயே இந்த போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான நிலையில் மயிலத்தமடு, மாதவனை பகுதியில் தொடர்ச்சியான அத்துமீறிய காணி அபகரிப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன. தற்போது வரைக்கும் அப்பகுதியில் 500க்கும் மேற்பட்ட அத்துமீறிய காணி அபகரிப்பாளர்கள் காணிகளை அபகரித்து பயிர்ச்செய்கையில் ஈடுபடும் நிலையில் கால்நடை பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை பாதுகாக்கமுடியாத திண்டாட்ட நிலைமை ஏற்பட்டுள்ளது.

தாங்கள் போராட்டம் நடத்தத் தொடங்கி இன்றுடன் 90 நாட்கள் கடந்துள்ள நிலையில் 190க்கும்மேற்பட்ட மாடுகள்கொல்லப்பட்டுள்ளதுடன் அத்துமீறிய குடியேற்றக்காரர்களினால் பல்வேறுசெயற்பாடுகள்முன்னெடுக்கப்படுவதாகவும் இது தொடர்பில் பொலிஸ் நிலையங்களுக்கு முறையிடச்சென்றால் முறைப்பாட்டை பண்ணையாளர்களுக்கு எதிராக திருப்பிவிடும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.



மட்டக்களப்பு மாவட்டத்தினை பொறுத்த வரையில் இங்கு பணிக்கு அமர்த்தப்பட்ட பொலிஸ் உயர் அதிகாரிகளிலிருந்து சாதாரண பொலிஸ் உத்தியோகத்தர்கள் வரையில் தீவிர இனவாத நிலையிலிருக்கும் பொலிஸாரே கடமைக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.நீண்டகால திட்டமிடலில் இந்த திட்டமிட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மயிலத்தமடு, மாதவனை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் காவலரணுக்கு சுமார் 15பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரும் கடும்போக்குக் கொண்ட சிங்கள பொலிஸ் உத்தியோகத்தர்களாகவே நியமிக்கப்பட்டுள்ளனர்.எவ்வளவோ தமிழ் பொலிஸார் உள்ளபோதிலும் சிங்கள பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளமை பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.



மயிலத்தமடு,மாதவனை பகுதியில் கால்நடை பண்ணையாளர்களுக்கு பல்வேறு நீதிமன்றங்களில் பல்வேறு வழக்குகள் கடந்த காலத்தில் வனஇலாகாவினராலும் பொலிஸாரினாலும் செய்யப்பட்டுள்ளது. காடுகள் வெட்டியது, தமது கால்நடை பண்ணைகளில் கத்திகளை வைத்திருந்தது என சிறிய சிறிய செயல்களுக்கு எல்லாம் வழக்கு தாக்கல் செய்தவர்கள் இது வரையில் அத்துமீறிய செயற்பாடுகளை முன்னெடுப்போருக்கு எதிராக ஒரு வழக்கும் தாக்கல் செய்யவில்லையென்பதே வேடிக்கையான விடயமாகவுள்ளது.

இவ்வாறான நிலையில் மயிலத்தமடு, மாதவனை பகுதியில் கால்நடை பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கால்நடை பண்ணையாளர்களின் குடும்ப உறவினர்கள், கால்நடை பண்ணையாளர் சங்கத்தினர் தமது உள்ளக்கிடக்கைகளை எம்மிடம் வெளிப்படுத்தினார்கள், மயிலத்தமடு, மாதவனை பகுதியில் கால்நடைகளை வைத்து வாழ்வாதாரத்தினை முன் கொண்டுசெல்லும் இரண்டு கால்நடையாளர்களின் தாயான வேலாயுதம் குமாரத்தி அவர்களும் முன்னெடுக்கப்படும் போராட்டத்தில் தொடர்ச்சியாக பங்கெடுத்துவருகின்றார். அவர் தெரிவித்ததாவது,

"மயிலத்தமடு,மாதவனை பகுதி எங்கட சொத்து. எங்க அப்பாட அப்பா என்ட கணவர் என்ட பிள்ளைகள் அங்கதான் மாடுகட்டி வாறாங்க. இண்டைக்கு என்ட பிள்ளைகள்ட மாடுகள் சுடப்படுது.நாளைக்கு என்ட பிள்ளைகளுக்கும் ஏதும் நடந்திடுமோ என்ற அச்சம் எனக்கு இருக்கின்றது.மாடுகளை கடத்திச்செல்வதும், கொலை செய்வதும், அநியாயங்கள்தான் நடக்கின்றது.

இந்த நிலைமையிலிருந்து எங்களுக்கு எப்போது விமோசனம் கிடைக்கும். இப்படி நடந்தால் எங்களது வாழ்வாதாரத்தை எப்படி கொண்டுசெல்லப்போகின்றோம். மாடுகளை இப்படிக்கொல்லுவோர் நாளை மனிதர்களையும் இப்படிகொல்லுவார்கள்.எங்களுக்குஇந்தநாட்டில் நீதி இல்லையா?இவ்வளவு காலமாக எவ்வளவோ கஸ்டத்தின் மத்தியில்தான் இந்த கால்நடைகளை நாங்கள் வளர்த்துவருகின்றோம்.இந்த நாட்டில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லையா. நாங்கள் தமிழன் என்டா இந்த நாட்டில்வாழமுடியாத நிலையா எங்களுக்கு இருக்கு. இந்த நாட்டில நாங்கள் பிறக் கலயா,இந்த நாட்டில் எங்களுக்கு உரிமை இல்லையா? என கேள்வி எழுப்பினார்.



இதேபோன்று தனது கால்நடை பண்ணை வைத்து கால்நடை வளர்ப்பில் மயிலத்த, மாதவனைப் பகுதியில் ஈடுபடும் கால்நடை பண்ணையாளரின் மனைவி சுரேந்திரன் நிர்மலா என்பவர் கண் ணீருடன் பல விடயங்களை எங்களுடன் பகிர்ந்து கொண்டார்,

"90 நாட்களுக்கும் மேலாகியும் எங்களுக்கு எந்த தீர்வும் இல்லை.எங்களது மூன்று மாடுகள் கொல்லப்பட்டுள்ளது.இந்த அரசாங்கம் எங்களை ஏளனமாக பார்க்கின்றது.நாங்கள் இந்த நாட்டில் தமிழர்களாக பிறந்ததற்கு இந்த நிலைமையாகவுள்ளதா?தேர்தல்கள் காலத்தில் மட்டும் வாக்குக்காக வருவோர் பின்னர் எங்களை கவனத்தில் கொள்வதில்லை.எனக்கு மூன்று பெண் பிள்ளைகள்.

அந்த கால்நடைகளை நம்பியே எனது குடும்பம் உள்ளது.நாங்கள் கடும் கஸ்டங்கள் ஏற்படும்போதே எங்களது மாடுகளை விற்பனை செய்வதில்லை.இன்று சிங்களவர்கள் எங்களது மாடுகளை சுட்டுக்கொலைசெய்துவிட்டு செல்கின்றனர்.ஒரு மாட்டை கொலைசெய்து இறைச்சியை கொண்டுசென்றுள்ளனர்.நாங்கள் இது தொடர்பில் கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் முறையிட்டாலும் எந்த தீர்வும் கிடைக்குதில்லை. எத்தனையோ முறைப்பாடுகளை பொலிஸ் நிலையத்தில் பதிவுசெய்தாலும் எந்த முறைப்




பாட்டுக்கும் எந்த தீர்வும் கிடைப்பதில்லை.

இந்த கடும் மழைக்கு மத்தியிலும் எங்கள் கணவன்மார்கள்,சகோதரர்களுடன் குழந்தைகள் உடன் இந்த சின்ன கொட்டிலுக்குள் நாங்கள் 90 நாட்களுக்கு மேலாக போராடிவருகின்றோம். அரசாங்கம்எங்களைகண்கொண்டுபார்க்கும்போது எங்களது கஸ்டம் புரியவில்லையா? நாங்கள் தமிழர்கள் என்ற காரணத்திற்காகவா எங்களை இவ்வளவு வதைசெய்கின்றீர்கள்?மாடுகளுக்கும் நிம்மதியில்லாத நிலைமை,மனிசனுக்கும் நிம்மதியில்லாத நிலையே இருக்குது.மனிசர்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டால் இவ்வாறுதான் கண் மூடிக்கொண்டிருப்பீர்கள்,எங்களுக்கு எங்கே

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# போஷாக்கின்மையில் வறுமையின் ஆதிக்கம்

துரைசாமி நடராஜா

இலங்கை சிறுவர்களின் போஷாக்கு நிலைமைகள் தொடர்பில் திருப்தியற்ற வெளிப்பாடுகள் இருந்து வருகின்றன. இந்நிலையானது கல்வி உள்ளிட்ட பல துறைகளின் பின்னடைவுக்கும் உந்துசக்தியாக இருந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனிடையே சிறுவர் போஷாக்கின்மை தொடர்பில் அரச நிறுவனங்கள் முன்வைத்துள்ள புள்ளிவிபர அறிக்கைகளில் இருந்து நாட்டின் உண்மை நிலைமை புலப்படவில்லை ஆதலால் போஷாக்கு தேவையுடைய பிள்ளைகளை சரியாக இனங்கண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பாராளுமன்ற விசேட குழு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

சிறுவர்களின் எண்ணிக்கை இதில் அதிகமாகவே உள்ளீர்க்கப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் வருடாந்தம் உற்பத்தி செய்யப்படும் உணவில் சுமார் 30 சதவீதம் முதல் 40 சதவீதம் வரை கழிவாக அகற்றப்படுகின்றன. இதனடிப்படையில் வருடாந்தம் 1.3 பில்லியன் தொன் உணவுக் கழிவுகள் குப்பைகளை சென்றடைவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறாக பல பில்லியன் தொன் கணக்கான உணவுகள் குப்பைகளை சென்றடையும் நிலையில் போதிய உணவில்லாமல் அதிலும் போஷாக்கான உணவில்லாமல் பலர் பட்டினிச்சாவை எதிர்நோக்கி வருகின்றமை கொடுமையிலும் கொடுமையாகும்.

உலகளாவிய ரீதியில் 828 மில்லியன் மக்கள் பட்டினியால் வாடுகின்ற நிலையில் உலக சனத்தொகையில் 40 சதவீதமாகவுள்ள 3.1 பில்லியன் மக்கள் ஆரோக்கியமான உணவைப் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதாக அண்மைக்கால தகவலொன்று வலியுறுத்துகின்றது. இதேவேளை இலங்கையில் உணவு தொடர்பான பாதுகாப்பின்மை காரணமாக கிராமப் பகுதிகளில் 83 சதவீதமானவர்களும், நகரப் பகுதிகளில் 17 சதவீதமானவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த வகையில் இலங்கையின் சனத்தொகையில் 30 சதவீதமானவர்கள் உணவுப் பாதுகாப்பின்மைக்கு கடந்த காலங்களில் முகம் கொடுத்திருந்ததை அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.



புறங்களில் வசிக்கும் எட்டு இலட்சத்துக்கும் அதிகமானோர் குடிநீர் வசதிகளை பெற்றுக் கொண்டதோடு, பின்தங்கிய மற்றும் பெருந் தோட்டங்களில் வசிக்கும் 285,403 சிறுவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன. எவ்வாறெனினும் 2022 ம் ஆண்டு செப்டம்பர் மாதமளவில் நாட்டின் மொத்த சனத்தொகையில் 28 சதவீதமானோர் அதாவது 6.2 மில்லியன் பேர் ஓரளவு உணவுப் பாதுகாப்பின்மைக்கும், 66,000 பேர் தீவிர உணவுப் பாதுகாப்பின்மைக்கும் முகங்கொடுத்திருந்ததாக அறிக்கைகள் வலியுறுத்தின.

இந்நிலையில் நாட்டிலுள்ள சிறுவர்களின் போஷாக்கு நிலைமைகள் குறித்து நாம் நோக்குகின்றபோது பெருந்தோட்ட சிறுவர்களின் போஷாக்கு நிலை தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இங்குள்ள சிறுவர்கள் தொடர்ச்சியாகவே போஷாக்கின்மைக்கு முகம் கொடுத்து வருவதாகவும் எனினும் இதனைத் தீர்த்துவைக்க காத்திரமான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.



ஒரு சமூகத்தின் அபிவிருத்தியில் போஷாக்கு என்பது கணிசமான செல்வாக்கு செலுத்துகின்றது. அதிலும் சிறுவர்களின் போஷாக்கு உறுதிப்படுத்தப்பட்டு அவர்கள் திடகாத்திரமானவர்களாக வளர்த்தெடுக்கப்படும் பட்சத்தில் அது பல்வேறு சாதக விளைவுகளுக்கும் அடிப்படையாக அமையும் என்பதையும் மறுப்பதற்கில்லை. இந்த வகையில் இலங்கையின் சிறுவர் போஷாக்கு நிலைமைகள் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் இருந்து வருகின்றன. அதிலும் கொரோனாவை பிந்திய காலகட்டம் சிறுவர்களின் போஷாக்கு உள்ளிட்ட நிலைமைகளை கேள்விக்குறியாக்கியுள்ளமையும் தெரிந்ததேயா கும்.





உலக உணவில் 14 சதவீதமானவை அறுவடைக்கும் விற்பனைக்கும் இடையிலும், 17 சதவீதமானவை விற்பனை மற்றும் பாவனை மட்டத்திலும் இழக்கப்படுவதாக தகவல்கள் வலியுறுத்துகின்றன. உலகில் 81 மில்லியனுக்கும் அதிகமானோர் பட்டினியால் வாடும் நிலையில்

### அமைப்புகளின் எச்சரிக்கை

சிறுவர்களைப் பொறுத்தவரையில் இலங்கையில் கடந்த 2021 ம் ஆண்டில் 12.2 சதவீதமாகக் காணப்பட்ட எடை குறைந்த சிறுவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 15.3 சதவீதமாக அதிகரித்திருந்தது. அதேபோன்று தமது பிள்ளைகளுக்கு அவசியமான உணவை வழங்குவதில் பெருமளவானகுடும்பங்கள்சிரமங்களுக்குமுகம் கொடுத்திருந்ததுடன் பொதுப் போக்குவரத்து சேவை குறைபாட்டின் விளைவாக சிறுவர்களால் பாடசாலைக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இவ்வாறான நடவடிக்கைகள் சிறுவர் தொழிலாளர் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு அடித்தளமிட்டதுடன் அவர்களின் பாதுகாப்பையும் கேள்விக்கு உட்படுத்தியதாக யுனிசெப் அமைப்பின் அறிக்கை வலியுறுத்தியது. இத்தகைய நிலையில் பொருளாதார நெருக்கடியின் விளைவாக பாதிக்கப்பட்டிருந்த மக்களுக்கு உதவும் வகையில் சுகாதாரம், போஷாக்கு, சிறுவர் பாதுகாப்பு,கல்வி, சமூகப் பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய துறைகள் சார்ந்த உதவி மற்றும் ஆதரவை வழங்குவதற்கென யுனிசெப் பல்வேறு திட்டங்களையும் அமுல்படுத்தி இருந்தது.

2022 ம் ஆண்டில் ஏழு இலட்சத்து 50,000 சிறுவர்கள் உள்ளடங்கலாக 1.3 மில்லியன் மக்களுக்கு அவசியமான மனிதாபிமான உதவிகளை யுனிசெப் வழங்கி இருந்தது. நகர்ப்

இந்நிலைக்கு சிறுவர்கள் பலரும் முகங் கொடுத்திருந்த நிலையில் அவர்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்பிற்கு உள்ளாகி இருந்தது. இதேவேளை இலங்கையில் குறைந்தபட்சம் 6.3 மில்லியன் மக்கள் தீவிர உணவுப் பாதுகாப்பின்மை நிலையை எதிர்நோக்கி இருப்பதாகவும்,அவசியமான உயிர்காக்கும் உதவிகள் மற்றும் வாழ்வாதார உதவிகள் என்பன வழங்கப்படாவிட்டால் இந்த ஆண்டில் அவர்களின் நிலைமை மேலும் மோசமடையுமென்று செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச்சங்கங்களின் கூட்டிணைவும் ஏற்கனவே வலியுறுத்தி இருந்தமையும் நோக்கத்தக்கதாகும்.

சிறுவர்களின் போஷாக்கு தொடர்பாக நாம் பேசுகின்றபோது மலையக பெருந்தோட்ட சிறுவர்கள் தொடர்பில் சற்று ஆழமாகவே சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது. இச்சிறுவர்களின் போஷாக்கிற்கும் பெற்றோரின் வருமானத்துக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைப்பதில்லை என்பது நீண்டகால குற்றச்சாட்டாக இருந்து வரும் நிலையில் இவர்களின் ஊதியம் மூன்று வேளைக்கு ஏதேனும் ஒரு உணவை உண்பதற்கே போதாதாகியுள்ள நிலையில் நிறையுணவு மற்றும் போஷாக்குணவு என்பதெல்லாம் வெறும் கனவாகவே இருந்து வருகின்றது.

இலங்கையின் வறுமை நிலைகுறித்து நாம் நோக்குகையில், 1990/91 இல் வறிய குடும்பங்களின்சதவீதம் தேசியளவில் 21.8 ஆகும். இது நகர்ப்புறத்தில் 12.9 ஆகவும், கிராமப்புறத்தில் 24.7 ஆகவும், பெருந்தோட்டத்தில் 16.7 ஆகவும் காணப்பட்டது. எனினும் பின்வந்த காலங்களில் வறிய குடும்பங்களின் சதவீதம் பெருந்தோட்டப் பகுதிகளில் தொடர்ச்சியாகவே அதிகரித்து வந்துள்ளது. இதற்கேற்ப 1995/96 இல் தேசியளவில் 24.3, நகர்ப்புறம் 11.0, கிராமப்புறம் 25.9, பெருந்தோட்டம் 32.2 என்ற சதவீதத்தில் நாட்டில் வறிய குடும்பங்களின் எண்ணிக்கை அமைந்திருந்தது. 2002 இல் பெருந்தோட்டத்தில்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

கட்டுரை

# கருணாநிதியும் ஜெயலலிதாவும் இந்தியாவின் கள்ள மௌனமும்

2009 ஆம் ஆண்டு, மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில், தமிழீழ மண்ணில் நிகழ்த்தப்பட்ட கொடூரமான இனப்படுகொலை, பல்வேறு பௌத்த சிங்கள அதிபர்களின் ஆட்சிக் காலங்களில் நிகழ்த்தப்பட்ட திட்டமிட்ட தமிழின அழிப்பின் தொடர்ச்சி. ஒரேயொரு வித்தியாசம் தான். முன்பு தவணை முறையில் தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். 2009இல் ஒட்டுமொத்தமாகத் தமிழினம் அழித்து ஒழிக்கப்பட்டது. அதிகாரப்பரவல் உள்ளிட்ட அசட்டுக் கோரிக்கைகளைக் காட்டிலும், 2009 இனப்படுகொலைக்கு நீதி கேட்பது தான், உலகத் தமிழினத்தின் ஒற்றைக் கோரிக்கையாக இருக்க வேண்டும். அது தான் அறம்.

தமிழக அரசியல் நகர்வுகள் குறித்தும், கட்சிகள் – இயக்கங்களின் நடவடிக்கைகள் குறித்தும் நாம் பேசத் தேவையில்லை. பௌத்த சிங்கள அரசியலுக்கும், இங்குள்ள அரசியலுக்கும் பெரிய வித்தியாசமில்லை. எல்லாமே வாக்கு வங்கி அரசியல். அரியணை மட்டுமே இலக்கு!

என்னைப் போன்றவர்கள் தி.மு.க.வைக் கடுமையாக விமர்சித்ததற்குக் காரணம், தனிப்பட்ட விருப்பு வெறுப்பு அல்ல! 2008 – 2009 இல் இருபத்தாறாவது மைலில் எங்கள் தொப்புள்கொடி உறவுகள் விரட்டி விரட்டிக் கொல்லப்பட்ட போது, தமிழ்நாட்டு அரியணையில் பிசின் போட்டு ஒட்டிக் கொண்டிருந்த தி.மு.க.வும், அதன் தலைவர் கலைஞர் கருணாநிதியும், கையாலாகாதவர்களாய் அதை வேடிக்கை பார்த்ததால் தான் நாங்கள் விமர்சித்தோம்.

அனைத்து விதமான உதவிகளையும் இந்தியா வழங்கியதால்தான் விடுதலைப் புலிகளை நாங்கள் வீழ்த்த முடிந்தது என்பது, 2018இல் மகிந்த ராஜபக்ச கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம். எந்த இந்தியா? ஆட்சி அதிகாரத்தில் காங்கிரஸ் கட்சி வீற்றிருந்த இந்தியா. அவர்களின் 'தயவுடன்' தான் கலைஞர் கருணாநிதி இங்கே முதல் வராக இருந்தார்.

'தயவுடன்' என்ற இந்த ஒற்றை வார்த்தை தான் ஈழத் தமிழ் மக்களுக்குக் குழிபறித்தது. நூற்றுக்கும் குறைந்த எம்.எல். ஏக்களுடன், காங்கிரஸ் தயவில் தான் தி.மு.க. அரியணையில் இருந்தது. அதனால் தான், ராஜபக்சக்களின் ஈவிரக்கமற்ற இனப்படுகொலைக்கு உதவிய காங்கிரஸை கலைஞரால் தட்டிக் கேட்க முடியாது போயிற்று என்பதை ஸ்டாலினேகூட மறுக்க முடியாது.

அதேசமயம், இந்தியாவின் ஆட்சி அதிகாரத்தைக் கைவசம் வைத்திருந்த காங்கிரஸ் கட்சியும், அவ்வளவு வலுவானதாக இல்லை. தி.மு.க. எம்.பிக்கள் ஒட்டுமொத்தமாகப் பதவி விலகி இருந்தால், காங்கிரஸ்அரசிற்குசிக்கல்வந்திருக்கும். அதன் நேரடி விளைவாக, இலங்கைக்கான ஆயுத உதவி நிறுத்தப்பட்டிருக்கலாம். அதற்கு நிச்சயம் வாய்ப்பிருந்தது. அப்படியொரு நிலையில், ஈழத்தமிழ் உறவுகளின் உயிர்களைக் காப்பாற்றுவதைவிட, பதவி நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்வதே கலைஞர் பெருமானின் முன்னுரிமையாக இருந்தது என்கிற குற்றச்சாட்டு நியாயமானது. டெல்லியில் காங்கிரஸ் ஆட்சிக்கு தி.மு.க வால் தலைவலி ஏற்பட்டிருந்தால், தமிழ்நாட்டில் தி.மு.க வின் தலை உருண்டிருக்கும். இதுதான் யதார்த்தம். அங்கே அடி விழுந்திருந்தால், இங்கே இடி விழுந்திருக்கும்.

ராஜினாமா செய்வோம் என்று தி.மு.க. தரப்பில் ஒருசில நாட்கள் ஆவேச உறுமல் கேட்டது. பின்பு அது காசநோய்க்காரனின் இருமல் மாதிரி ஆனதெல்லாம் பழங்கதை.

'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்கிற உன்னதமான சுதந்திரப் போராட்ட வீரர்கள் குறித்த புரிதல் நீண்ட நெடுங்கால அரசியல்வாதியான கலைஞர் கருணாநிதிக்கே இல்லை என்கிற நிலையில், செல்வி ஜெயலலிதாவிடம் அதை எதிர்பார்ப்பதில் நியாயமேயில்லை. ஆனால் 2009 இற்குப் பின்னான அவர்கள் இருவரின்



புகழேந்தி தங்கராஜ்

அசைவுகளைக் கூர்மையாகவும், நேர்மையாகவும் அவதானிக்க வேண்டியிருக்கிறது.



தமிழினப் படுகொலையைத் தடுத்து நிறுத்த 'முயலாத' கருணாநிதி அல்லது 'முடியாத' கருணாநிதி, தன் மீதான அந்த வரலாற்றுக் களங்கத்தைத் துடைப்பதற்காகவே அவசர அவசரமாகச் 'செம்மொழி மாநாடு' நடத்தியதை வரலாறு மன்னிக்குமா? "உலகெங்கிலுமிருந்து இந்த மாநாட்டில் தமிழர்கள் பங்கேற்க வேண்டும்" என்றெல்லாம் அழைப்பு விடுத்தவர், "முள்ளிவாய்க்காலில் இருந்தும் தமிழர்கள் உயிர்த்தெழுந்து வந்து பங்கேற்க வேண்டும்" என்று அழைத்திருக்க முடியுமா? "வெல்க தமிழ், கொல்க தமிழரை" என்கிற கொள்கை, அயோக்கியத்தனமா, இல்லையா? இதைத்தான் நாங்கள் கேட்டோம்.

அந்த மாநாட்டில் அன்பு அண்ணன் வைரமுத்து கவித்துவமாகப் பேசிக் கொண்டிருந்த போது, மாநாட்டுப் பந்தலுக்கு வெளியே துண்டுப் பிரசுரம் விநியோகித்த இளைஞர்கள் அடித்து உதைக்கப்பட்டது இப்போதும் நினைவிருக்கிறது. "எட்டப்பன் கருணாநிதியை கட்டப்பொம்மனாகக் காட்டச் செம்மொழி மாநாடா?" என்கிற அந்தப் பிரசுரத்தின் இரத்தினச் சுருக்கமான மூன்றே வரி தமிழ், தமிழினப் படுகொலையில் கொந்தளிப்பிலிருந்த தமிழ்நாட்டின் மனசாட்சியில் ஒலிக்க வைத்தது. அது ஒரு ஆவேச ஹைக்கூ என்பதை அண்ணன் வைரமுத்துவால் நிச்சயம் உணர முடிந்திருக்கும். என்றாலும் வாயிருந்தும் ஊமைகள் போலத்தான் இருந்தார்கள். அவரும் மேடையிலிருந்த கவிஞர் பெருமக்களும்!

இனப்படுகொலைக்குப் பின் கலைஞர் கருணாநிதி சென்னையில் கூட்டிய 'டெசோ (TESO)' மாநாடு, 'டெசோ' மாநாடாகவே சித்தரிக்கப்பட்டது. 'தமிழீழ ஆதரவாளர்கள் அமைப்பு' என்ற அதன் முழுப் பெயரைக் குறிப்பிடக்கூட அஞ்சிய கலைஞர்பிரான், 'டெசோ' மாநாடாகவே அதை நடத்தி மத்தியிலிருந்த காங்கிரஸ் அரசு மனங் கோணாமல் பார்த்துக் கொண்டார். இப்படியெல்லாம் அஞ்சி நடுங்குகிறவர் எதற்காக இப்படியொரு மாநாட்டை நடத்த வேண்டும் என்கிற கேள்வி அப்போது எழுந்தது.

என்றாலும், "இனஅழிப்பு குறித்து விசாரிக்க நம்பகமான சர்வதேச சுதந்திர விசாரணைக்குழு அவசியம்" என்று 'டெசோ' வலியுறுத்தியதற்காக நாம் நன்றி பாராட்டலாம். தவறில்லை.

இதைத்தான் ஜெயலலிதா முதல்வராக இருந்த போது அழுத்தம் திருத்தமாக ஆணித்தரமாகச் சொன்னார். 2011 சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் முதல்வரான கையோடு, "இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை தேவை" என்கிற தீர்மானத்தை சட்டசபையிலேயே கொண்டுவந்தார். துஷ்டன் இலங்கையுடன் உறவை அறுப்பதே சரி என்று வலியுறுத்தினார். 'டெசோ' என்கிற அமைப்பின் தீர்மானத்தைக் காட்டிலும் வலுவானதாகவும் இருந்தது. அந்த அதிகாரபூர்வமான தீர்மானம்.

விடுதலைப் புலிகளைக் குறித்த பிழையான பார்வை கருணாநிதிக்கும் இருந்தது. ஜெயலலிதாவுக்கும் இருந்தது. என்றாலும், இனப்படு கொலைக்கான நீதியை அமைப்பு ரீதியாக வலியுறுத்தியதுடன் நின்றுவிடாமல், அதிகாரபூர்வமாக வலியுறுத்தியவர் ஜெயலலிதா. இந்த வரலாற்றை எவராலும் மாற்ற முடியாது. மீண்டும் தமிழக சட்டப்பேரவையில் அதே போன்றதொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது, தொலைபேசி மூலம் தனக்கு நன்றி கூறிய வட மாகாண முதல்வர் விக்னேஸ்வரனை நேரில் சந்திக்கும் விருப்பத்தைத் தெரிவித்தவர் ஜெ. அது விக்னேஸ்வரனுக்கு மட்டுமே விடுக்கப்பட்ட அழைப்பல்ல. ஈழத் தமிழ் மக்களுக்கான அழைப்பு. தமிழக முதல்வர் என்கிற அடிப்படையில் செல்வி ஜெயலலிதா, தமிழ் மக்களின் மனசாட்சியாய் பேசிய பிறகும், இனப்படுகொலைக்கு சர்வதேச நீதியைப் பெறும் முயற்சியையோ, துஷ்டன் இலங்கையைத் தூர நிறுத்தும் முடிவையோ எடுக்காமல் இழுத்தடிக்கிறது மோடி அரசு.

மற்றெல்லா விஷயங்களிலும் காங்கிரஸை மூர்க்கமாக எதிர்க்கும் பாரதிய ஜனதா கட்சி, இனப்படுகொலைக்கு சகல விதத்திலும் உதவிய காங்கிரஸின் நடவடிக்கைகளைக் கண்டிக்கவோ, அம்பலப்படுத்தவோ இந்த 14 ஆண்டுகளில் ஒரு துரும்பைக்கூட தூக்கி வைக்கவில்லை. 2009இல் ஒன்றரை லட்சம் தமிழ் உறவுகளை ஈவிரக்கமின்றி கொன்று குவிக்க இந்தியாவின் உதவிகள்தான்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# அரசியல் மற்றும் இராஜதந்திர பணிகள் சரியாக மாற்றீடு செய்யப்பட வேண்டும்

வேல்ஸ் இல் இருந்து **அருஸ்**

தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் 17 ஆவது ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு கடந்த வியாழக் கிழமை(14) புலம்பெயர் தேசத்தில் இடம்பெற்ற நினைவு நிகழ்வில் போரியல் ஆய்வாளர் அருஸ் காணொளி மூலம் ஆற்றிய உரை.

தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் 14 ஆவது ஆண்டு நினைவு தினத்தை நாம் இன்று நினைவு கூர்வதற்கு ஒன்று கூடியுள்ளோம். எமது மக்களின் விடு தலைக்கான போரில் தமிழீழ விடுதலைப் புலி களுடன் 28 வருடங்கள் பயணித்த தேசத்தின் குரல் அவர்கள் பிரதம ஆலோசகராகவும், பொருமளவான பேச்சுவார்த்தைகளை தலைமை தாங்கியவராகவும், மிகச்சிறந்த இராஜதந்திரரி யாகவும் விளங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

விடுதலைப்போர் பல இராஜதந்திர நெருக்டிகளை சந்தித்தபோதெல்லாம் அதனை தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரனின் கொள்கைகளுக்கு அமைவாக தமிழ் மக்களுக்கு சாதகமாக மாற்றியமைத்த பெருமைகள் தேசத்தின் குரல் பாலசிங்கம் அவர்களுக்கு உண்டு.

உதாரணமாக விடுதலைப்புலிகள் போரில் தான் நம்பிக்கை கொண்டவர்கள், பேச்சுகளில் அல்ல என்று இந்தியா ஊடாக மேற்கொள்ளப்பட்ட போலியான பிரச்சாரங்களுக்கு தனது போரும் சமாதானமும் என்ற நூலில், திம்பு தொடக்கம் நோர்வேயின் அமைதி முயற்சி வரையிலும் எந்த பேச்சுகளையும் விடுதலைப்புலிகள் புறந்தள்ள வில்லை என ஆதாரத்துடன் பதிவிட்டு சென்றவர் அவர்.





தமிழ் மக்களின் நலன் சார்ந்து விடுதலைப்புலிகள் எவ்வளவு தூரம் உண்மையாகவும், நியாயமாகவும் செயற்பட்டவர் கள் என்பதையும், இலங்கை, இந்திய அரசுகளும், மேற்குலகமும் எவ்வாறு நேர்மையற்று நடந்தார்கள் என்பதையும் அவர் தான் பெற்ற அனுபவங்கள் மூலம் எமக்கு எழுதிவைத்துள்ளார். 1983 ஆம் ஆண்டு இந்திய அரசு எமது மக்களை தனது நலன்களுக்கான பயன்படுத்த ஆரம்பித்தது எனவும் அது 1985 ஆம் ஆண்டு திம்பு பேச்சு களில் உச்சம் பெற்றது எனவும், 1987 ஆம் ஆண்டு இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவை இராஜதந்திர வழியிலும், விடுதலைப்புலிகளை படைத்துறையாகவும் கையாள இந்தியா திட்ட மிட்டதையும் அவர் தெளிவாக்கியுள்ளார். 1990 ஆம் ஆண்டு இந்தியாவால் ஏற்படவிருந்த மிகப்பெரும் ஆபத்தை அரசியல் - இராஜதந்திர வழிகளில் முறியடித்ததில் தேசத்தின் குரலின் பங்கு முக்கியமானது.

அதன் பின்னர் பிரேமதாசா காலத்தில் ஏற்பட்ட பேச்சுகளின் போதும், அதற்கு பின்னர் சந்திரிக்கா குமாரணதுங்காவின் காலத்தில் மேற் கொள்ளப்பட்ட பேச்சுகளின்போதும் எவ்வாறு இலங்கை அரசு தமிழ் மக்களின் அடிப்படை மனிதாபிமான பிரச்சனையை கூட நிறைவேற்ற முன்வரவில்லை என்பதை அவர் தனது நூலில் தெரிவித்துள்ளார்.



பேச்சுகளை ஒருபுறம் நடத்திக்கொண்டு யாழ் குடாநாட்டை கைப்பற்ற சந்திரிக்கா திட்ட மிட்டது ஒருபுறம் இருக்க, நோர்வேயின் சமாதான உடன்படிக்கையை இலங்கை அரசு எப்படி மீறியது என்பதையும் தெளிவாக குறிப்பிட்டிருந்தார். வொசிங்டனில் இடம்பெற்ற கொடைவழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு விடுதலைப்புலிகளை கலந்துகொள்ளவிடாது அமெரிக்கா புறந்தள்ளியது என்பது தமிழ் மக்களுக்கு அனைத்துலக அரங்கில் அங்கீகாரம் கிடைக்கவிடாது செய்வதற்கான திட்டமிட்ட செயல் என்பதையும் தெளிவாக எடுத்துக் கூறியிருந்தார்.



அது மட்டுமல்லாது ஆக்கிரமித்த காணி களை விடுவித்து படையினரின் பிரசன்னத்தை

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# படிம எரிபொருள் (fossil fuel) தொடர்பாக காத்திரமான முடிவை எட்டிய

# துபாய் காலநிலை மாநாடு

"படிம எரிபொருள் யுகத்தின் முடிவின் ஆரம்பம்" *(the beginning for the end for the fossil fuel era)* என்று ஐக்கிய நாடுகளினால் முக்கியத்துவம் கொடுத்து வர்ணிக்கப்படுகின்ற, ஓர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஒப்பந்தத்தை, கொப் 28 (COP 28) என அழைக்கப்படுகின்ற பூகோள காலநிலை உச்சி மாநாடு *(Global Climate Summit)* தற்போது எட்டியிருக்கிறது.




இருபத்து நான்கு மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு, தீவிர மான பேச்சுவார்த்தைகளின் பின்னர், எதிர் வரும் பத்து ஆண்டுகளில், எல்லாவிதமான எண்ணெய், நிலக்கரி, வாயு போன்றவற்றிலிருந்து படிப்படியாக விலகி, 2050ம் ஆண்டில் பூச்சிய நிலையை அடையும் நோக்குடன், ஒரு ஒப்பந்தம் ஒப்பமிடப்பட்டிருக்கிறது. உண்மையில் குறிப்பிட்ட இந்த இலக்கில் இருந்து உலகம் மிகவும் தொலைவிலேயே இருக்கிறது என்பது புரிந்து கொள்ளப் படவேண்டிய ஒரு விடயம் ஆகும்.

தமிழில்: **ஜெயந்திரன்**

புதன்கிழமை காலையில், துபாயில் நடைபெற்ற மாநாட்டின் இறுதி அமர்வில், இந்த முடிவு எடுக்கப்பட்டது. பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தை, ஆழமாக, விரைவாக, தொடர்ச்சியாகக் குறைத்துக்கொள்ள வேண்டியதன் அவசியமும் அங்கு வலியுறுத்தப்பட்டது.



ஐக்கிய அரபு எமிரகத்தில் நடைபெற்ற, கொப்28 மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய, சுல்தான் அல் ஜாபர் *(Sultan Ahmed al-Jaber)*, பாரம்பரிய முறையில் சம்மட்டியைத் தட்டி, ஒப்பந்தம் எட்டப்பட்ட தருணத்தைப் பகிரங்கமாக அறிவிக்க, மாநாட்டில் ஒன்றுகூடியிருந்த பிரநிதிகள் அனைவருமே தமது இருக்கைகளை விட்டு எழுந்து, கைகளைத் தட்டி ஆரவாரம் செய்தது மட்டுமன்றி, மகிழ்ச்சியில் ஒருவரையொருவர் கட்டித்தழுவிய காட்சியையும் கண்ணாரக் காணக்கூடியதாகவிருந்தது. அதே நேரம் ஒருசில நாடுகள் நடுவே, ஒப்பந்தம் தொடர்பாக கருத்து வேறுபாடுகள் நிலவியதையும் அவதானிக்க முடிந்தது. சிறிய தீவுகளைக் கொண்ட இவ்வாறான நாடுகள் குறிப்பிட்ட ஒப்பந்தம் பல குறைபாடுகளைக் கொண்டிருப்பதாகக் கருத்துத் தெரிவித்தனர்.




- ***2030ம் ஆண்டளவில் புதுப்பிக்கப்படக்கூடிய சக்தியை உலகளாவிய வகையில் 3 மடங்காக அதிகரித்தல்***
- ***நிலக்கரிப் பயன்பாட்டைக் கட்டம் கட்டமாகக் குறைத்து, புதிய மற்றும் கட்டுப்பாடற்று இயங்கும் நிலக்கரியால் இயக்கப்படும் மின் நிலையங்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துதல்***
- ***நீதியான, ஒழுங்குசீரான, சமத்துவமான வகையில், படிம எரிபொருளிலிருந்து படிப் படியாக விலகி, 2050 இல் பூச்சியம் என்ற இலக்கை எட்டுதல்***
- ***காபனீரொட்சைட்டு அல்லாத, குறிப்பாக மீதேன் போன்ற வாயுக்களின் வெளியேற்றத்தை 2030ம் ஆண்டளவில், கணிசமான அளவு குறைத்துக்கொள்ளல்***

போன்ற விடயங்களை ஏற்றுக்கொள்வதாக பரபரப்பான அந்த நாளில், மாநாட்டுப்பிரதிநிதிகள், சம்மதம் தெரிவித்தார்கள்.

'ஐக்கிய அரபு எமீரகத்தில் அடையப்பெற்ற ஒருமித்த கருத்து' என்று ஒப்பந்தத்தை அழைத்த மாநாட்டு அதிபர், அவ்வாறான திட்டம் விஞ்ஞானத்தினால் வழிநடத்தப்பட்டது என்றும், 2015 இல் பாரிஸ் மாநாட்டின் இலக்குகளை அடைவதை நோக்காகக் கொண்டிருந்தது என்றும் தெரிவித்தார்.

வரலாற்றில், முதல் தடவையாக, 'படிம எரிபொருள்' போன்ற சொற்றொடர் எமது ஒப்பந்தத்தின் இறுதிப் பதிப்பில் உள்வாங்கப்பட்டிருக்கின்றது என்று ஐக்கிய அரபு அமீரகத்தின் அரச எண்ணெய் நிறுவனத்தின் முதன்மை நிறைவேற்றுப்பணிப்பாளராகிய திரு. ஜாபர் சுட்டிக் காட்டினார்.

மானிட சமூகத்தின் அடிப்படை கால நிலை தொடர்பான பிரச்சினையாகிய படிம எரிபொருள், மற்றும் பூகோளத்தை எரிக்கும் அளவுக்கு அதிகரித்து விட்ட அதன் மாசுபடுத்தும் பிரச்சினைகள்தொடர்பாக, காத்திரமான ஒரு சமிக்ஞையைக் கொடுக்க வேண்டிய தேவை, கொப் 28 மாநாட்டுக்கு இருந்தது என்று காலநிலைக்கான செயரலாகப் பணிபுரிகின்ற சைமன் ஸ்ரியெலின் *(Simon Stiell)* கூற்றுடன் ஐக்கிய நாடுகள் மேற்குறிப்பிட்ட நகர்வை வரவேற்றது.

படிம எரிபொருள் தொடர்பாக துபாயில் எந்தவொரு மாற்றமும் ஏற்படாத போதிலும், "இங்கு அடையப்பட்டது ஒரு முடிவின் தொடக்கம்" என்று அவர் கூறினார். இந்த அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டவுடன் மசகு எண்ணெயின் விலையில் சரிவு ஏற்பட்டதையும் அவதானிக்க முடிந்தது.




ஒப்பந்தத்தின் இறுதி வடிவத்தில் உள் அடக்கப்பட்ட மொழிநடை, முன்னரைவிடப் பல மானதாக இருந்தது. காரணம் அதற்கு முன்னர் தயாரிக்கப்பட்ட வடிவத்தில் படிம எரிபொருளை 'படிப்படியாகக் குறைத்தல்' என்னும் சொற்றொடர் தவிர்க்கப்பட்டிருந்தது. "இந்த மாற்றத்தை நோக்கி பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற தமது பங்கு முக்கியமாக அமைந்தது" என்று அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் உரிமைகோரியிருந்தன.

படிம எரிபொருளைப் 'படிப்படியாகக் குறைத்தல்' என்ற சொற்றொடரை எதிர்த்தவர்களுக்கு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகமான அந்தோனியோ குத்தெரேசிடமிருந்து *(Antonio Guterres)* கடுமையான ஒரு செய்தி காத்திருந்தது. சவூதி அரேபியா, ஈராக், ரஷ்யா, ஓபெக் உறுப்பினர்கள், மற்றும் பெற்றோலியத்தை அதிகமாகக் கொண்ட நாடுகள் இவ்வாறான சொற்பதங்களை எதிர்த்ததாகச் சொல்லப்பட்டது.

"நீங்கள் விரும்பினாலென்ன விரும்பாவிட்டாலென்ன, படிம எரிபொருளைக் கட்டங் கட்டமாகக் குறைப்பது தவிர்க்க முடியாதது"

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## அரசியல் மற்றும்... தொடர்ச்சி ...

குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமான முயற்சிகளைக் கூட விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கைவிட்டாலே சாத்தியமாகும் என இலங்கை அரசு தெரிவித்ததாக தெரிவித்திருந்தார்.

ஆனால் அன்று விடுதலப்புலிகள் ஆயுதங்களை கைவிட்டாலும் இலங்கை அரசின்; ஆக்கிரமிப்புக்கள் குறைந்துவிடாது, மேலும் அதிகரித்திருக்கும் என்பதை தான் 2009 ஆம் ஆண்டு ஆயுத மௌனிப்பின் பின்பும் இடம்பெறும் சம்பவங்கள் எமக்கு காண்பிக்கின்றன.

இலங்கையை பங்கு பிரிப்பதற்காக போட்டி போட்டுக்கொண்டு தமிழ் மக்களின் நடைமுறை அரசை அழித்த இந்தியாவும், அமெரிக்கா தலைமையிலான கூட்டணியினரும் இன்று தமது செலுவுக்காக வருந்துவார்கள் என்பதை நாம் அறிவோம்.

1990 களில் இலங்கையில் இருந்து இந்திய படையின் வெளியேற்றமும், 2023 ஆம் ஆண்டு மாலைதீவில் இருந்து இந்திய படையினரின் வெளியேற்றமும் இந்தியா சந்தித்த இருபெரும் இரஜதந்திர தோல்விகள்.

உக்ரைனிலும், பாலஸ்தீனத்திலும் சிக்கியுள்ள மேற்குலகம் தனது உலக வல்லாதிக்கத்தை இழந்து வருகின்றது. தமிழீழத்தில் இனப்படுகொலையை அனுமதித்த ஐ.நா இன்று காசாவில் தனது முழு நம்பிக்கையையும் இழந்து நிற்கின்றது. ஐ.நாவிற்கு மாற்றீடாக ஒரு அமைப்பை உருவாக்கும் பேச்சுக்களும் எழாமலில்லை.

ஈழத்தமிழர்களை இனி தனது அரசியல் நலன்களுக்கு பயன்படுத்த முடியாது என அறிந்த இந்தியா இப்போது அவர்களை கைவிட்டு மலையகம் நோக்கி தனது பார்வையை திருப்பியுள்ளது.

ஆனால் மியான்மார் ஊடாக சீனா அமைக்கின்ற வர்த்தக பாதையில் இலங்கை இணையும் என் பதை இலங்கை அதிபர் எந்த தயக்கமுமின்றி தெரிவித்துவிட்டார். இந்தியாவின் பாதுகாப்பில் தான் இலங்கையின் பாதுகாப்பு தங்கியுள்ளது என இலங்கைக்கான இந்திய தூதுவர் பாக்லே விடுத்த மிரட்டலும் இலங்கையை ஒன்றும் செய்யவில்லை.

அமெரிக்கா பிரித்தானியா தலைமையிலான 39 நாடுகளின் கடற்படை கூட்டணியில் இலங்கை இணைந்தாலும் வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகத்தின் நடவடிக்கைகளை உன்னிப்பாக கண்காணிக்கின்றது மேற்குலகம்.

நடக்கும் சம்பவங்களையும், உலக அரசியலையும் ஒப்புநோக்கிப் பார்த்தால் எமக்கான முக்கியத்துவத்தை நாம் உணரமுடியும். ஆனால் அதனை நாம் சரியாக கையாள்கிறோமோ இல்லையா என்பது தான் தற்போதைய கேள்வி. அதாவது இந்த உலக மாற்றத்தை சரியாக உள்வாங்கி எமக்கான வழிகாட்டியாக எமது தேசத்தின் குரல் எம்முடன் இல்லை என்பதை மிகுந்த வேதனையுடன் நாம் இப்போது உணர்கின்றோம்.

ஒவ்வொரு வருடமும் எமது தேசியத் தலைவர் ஆற்றிய மாவீரர்நாள் உரை என்பது மாவீரர்களை நினைவுகூரும் உரை மட்டுமல்ல, அந்த வருடம் இடம்பெற்ற அரசியல், இரஜதந்திர மற்றும் படைத்துறை நகர்வுகள், அதில் தமிழ் மக்கள் எதிர்கொண்ட சவால்கள், அவற்றை முறியடித்து விடுதலைப்பயணத்தை முன்னோக்கி நகர்த்த விடுதலைப்புலிகளின் ஆற்றிய பணிகள், அவர்களின் உத்திகள், எதிர்கால நகர்வுகள், எதிர்கால செயற்பாடுகளுக்கான ஆயத்தங்கள், உலக அரசியல் மற்றும் இரஜதந்திர நகர்வுகள் என்று எல்லாம் அந்த உரையில் இருக்கும்.

அதனை தேசியத்தலைவருடன் இணைந்து வடிவமைப்பதிலும், தேசியத்தலைவரின் உரைக்கு பின்னர் அதற்கான மேலதிக விளக்கங்களுடன் தமிழ் மக்களுக்கான தெளிவான அரசியல் மற்றும் இரஜதந்திர புரிதலை ஏற்படுத்துவதிலும் தேசத்தின் குரல் ஆற்றிய பணி மகத்தானது.

அவர் ஆற்றிய அந்த அரசியல் மற்றும் இராஜதந்திர பணிகள் இன்று சரியாக மாற்றீடு செய்யப்படாது வெற்றிடமாக உள்ளதாக நாம் உணர்கின்றோம். அந்த வெற்றிடத்தை நிரப்பி எமது விடுதலைப்போரை முன்நகர்த்த எல்லோரும் சேர்ந்து முயற்சிப்போமானால் அதுவே நாம் அவருக்கு செய்யும் மகத்தான அஞ்சலியாகும்.

• • •

## மாடுகளை ... தொடர்ச்சி ...

நீதி கிடைக்கப்போகின்றது.நூறு நாட்களுக்குள் எங்களுக்கான நீதி கிடைக்கவேண்டும்" என்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கும் காலத்தில் மயிலத்தமடு, மாதவனைக்கு கால்நடைகளை கொண்டு செல்வதற்கான தீர்மானங்கள் மாவட்ட மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் மாவட்ட அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், பொலிஸார், வனஇலாகா, விவசாய திணைக்களங்கள் இணைந்து நடாத்தும் கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன. ஆனால் அங்கு கொண்டு செல்லப்படும் கால்நடைகளுக்கு ஒரு பிரச்சினையென்றாலும் யாரும் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை, அது தொடர்பில் கண்டும் காணாமல் இருக்கும் நிலைமையே காணப்படுவதாக மயிலத்தமடு, மாதவனை கால்நடை பண்ணையாளர்கள் சங்க தலைவர் சி.நிமலன் தெரிவிக்கின்றார்.

"நாங்கள் அறவழி போராட்டம் ஆரம்பித்த நாளிலிருந்து இன்றுவரையில் 192 மாடுகள் கொல்லப்பட்டுள்ளது. மின்சாரம், வாய்வெடி, துப்பாக்கிசூடு என பல்வேறு வழிகளில் மாடுகள் கொல்லப்பட்டுள்ளது. இது தொடர்பில் கரடியானறு பொலிஸ் நிலையம், வாழைச்சேலை பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு பதிவு செய்தும் சுட்டவர்கள் குறித்தும் முறைப்பாடுகளை பதிவுசெய்தபோது முறைப்பாடு பதிவுசெய்ச் சென்றவர்கள் மீதே வழக்குதாக்கல் செய்துள்ளனர்.

கிருஸ்ணபிள்ளை என்பவரின் எட்டு மாடுகள் கொல்லப்பட்டுள்ளன. ஆனால் அவருக்கு எதிராக பொலிஸார் வழக்கு தாக்கல் செய்தனர். நாங்கள் கொல்லப்பட்ட மாடுகளுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். ஆனால் எந்த நடவடிக்கையும் இல்லை. இது தொடர்பில் அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், மனித உரிமைகள் ஆணைக்குழு, விவசாய திணைக்களம், பொலிஸ்மா அதிபர், ஜனாதிபதி என அனைவருக்கும் கடிதங்க்ள மூலம் அறிவித்திருக்கின்றோம்.

இதுவரைக்கும் எங்களுக்கு எந்த பதிலும் வழங்கப்படவில்லை. இது தொடர்பில் பிரதேச செயலாளர்கள், அரசாங்க அதிபரை தொடர்பு கொண்டு கூறினாலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. கரடினாறு பொலிஸ் நிலையத்தில் எனது மாடு கொல்லப்பட்டது தொடர்பில் முறைப்பாடு செய்யச்சென்றபோது அங்கிருந்த பொறுப்பதிகாரி என்னை மாடுகளை சரியாக பார்க்குமாறு கூறுகின்றார். நாங்கள் மாடுகள் வளர்த்த இடத்தில் அத்துமீறி விவசாயம் செய்கின்றனர். காடுகளுக்குள் மாடுகளை கொண்டு சென்றால் யானைகள், காற்றும் மழையும் வந்தால் மாடுகள் அங்கு நிற்காது. எங்களது மாடுகள் வரும்போது சுடுகின்றார்கள், வெட்டிக்கொல்லுகின்றார்கள்.

அவர்களுக்கு மட்டுமே சட்டமும் நீதியும். விவசாய நடவடிக்கை காலத்தில் கட்டாயம் மாடுகளை கொண்டுசெல்லுமாறு பொலிஸாரும் அதிகாரிகளும் வற்புறுத்தும்போது அதற்கான பாதுகாப்பினை வழங்குவதில்லை. சட்ட விரோத குடியேற்றக்காரர்களை வெளியேற்றுமாறு ஏறாவூர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவினை இன்னும் பொலிஸாரோ அதிகாரிகளோ நடைமுறைப்படுத்தவில்லை. ஆனால் பண்ணையாளர்களுக்கு எதிராக ஏதும் நடவடிக்கையெடுப்பது என்றால் உடனடியாக செய்வார்கள்.

இந்த நாட்டில் சிங்களர்களுக்கு ஒரு சட்டம் தமிழர்களுக்கு ஒரு சட்டம் என்பதையே கால்நடை பண்ணையாளர்களின் விடயத்தில் அரசாங்கம் காட்டிவருகின்றது. எங்களுக்கான நீதி கிடைக்கும் வரையில் நாங்கள் ஓயப்போவதில்லை. சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் எங்கள் நிலைமையினை கவனத்தில் கொண்டு இந்த அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுக்கவேண்டும். இன்று சர்வ தேச நாணய நிதியம் காசு கொடுக்கின்றது. அதனை கொண்டு இந்த நாட்டில் உற்பத்திகளை அதிகரிப்பதற்கு பதிலான இவ்வாறான அத்துமீறிய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கே பயன்படுத்துவார்கள். எங்களது பிரச்சினைக்கான தீர்வு கிடைக்கும் வரையில் எமது போராட்டம்

• • •

## இந்தியாவை ... தொடர்ச்சி ...

இருந்து மீள்வதற்கான வழியை தேடுகின்றது. அதேசமயம், தற்போதைய ரணில் அரசு அடுத்தவருடம் தேர்தலை சந்திக்கவும் போகின்றது.

தேர்தலை சந்திக்கும்போதும், பொருளாதார நெருக்கடிகள் மற்றும் அரசியல் நெருக்கடிகளை சந்திக்கும் போதும் இலங்கை அரசு தமிழர்களின் தயவுகளை நாடுவதுண்டு. அதை நம்பும் தமிழர் தரப்புக்கள் ஒவ்வொரு தடவையும் ஏமாற் றப்படுவதுண்டு.

இலங்கை இந்திய உடன்பாட்டில் இந்தியா வையோ, ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தையோ துணிந்து எதிர்க்கும் இலங்கை அரசுக்கு தமிழ் மக்களின் ஆதரவுகள் அற்ற ஒரு சில குழுக்களின் அழுத்தம் ஒன்றும் செய்யாது.

அதாவது தனது தேவைகள் தீர்ந்ததும், கடந்த சென்றுவிடுவார்கள். தற்போதைய தீர்மானத்தின் முக்கிய நோக்கம் என்பது மக்களின் உரிமைகளை மதித்தல் சமமாக வாழுதல், அது சிங்களவர்களுக்கு ஏற்கனவே உண்டு. ஆனால் தமிழர் முன் தான் ஆயிரம் பிரச்சனைகள் உண்டு.

உதாரணமாக மைலத்தனைமடு, மாதவனை தொடக்கம் தையிட்டி வரையிலும் உள்ள நில ஆக்கிரமிப்பு, மற்றும் சில ஆயிரம் நாட்களை கடந்து தொடரும் காணாமல் போனவர்களின் உறவினர்களின் போராட்டம் என்பன அவற்றில் சில. இலங்கையின் நீதிமன்றம், இலங்கை அரசு, இலங்கையின் திணைக்களங்கள் எல்லாம் ஒன்றாக நின்று நடத்தும் கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பு அது. அதுவே தற்போது தமிழ் மக்கள் முன் உள்ள பிரதானமான பிரச்சனைகள். அவர்கள் அங்கு சமமாக நடத்தப்படவில்லை என்பதற்கான தெளிவான முன்உதாரணங்கள்.

இந்த பிரச்சனைகளை அரசு சராது மக்களிடம் சென்று தீர்க்கப்போவதாக கூறும் இவர்களின் நடவடிக்கை என்பதும், இலங்கையில் அமைக்கப்பட்ட ஆணைக்குழுக் கள் எவையும் தீர்வைத்தராது காணாமல்போன வரலாறுகளே உண்டு என அனைத்துலக மன்னிப்புச்சபை கூறிய கருத்தையும் இந்த பிரகடனம் மாற்றுமா?

இந்த பிரகடனத்தில் இலங்கையின் ஒற்றை ஆட்சியை பலப்படுத்துதல் என்று அடிக்கடி கூறப்படும் சரத்துக்குள் தமிழர்களின் எஞ்சிய உரிமைகளும் கரைந்து காணாமல்போகுமா என்பது தான் தற்போதுள்ள கேள்வி.

மலைதீவில் இருந்து இந்திய படையினரை வெளியேற்றக்கூடாது என்று ஏன் ரணில் மாலைதீவு அதிபரிடம் கேட்கவில்லை என இந்திய ஊடகம் ஒன்று ரணிலிடம் அண்மையில் கேட்டபோதே இந்தியாவின் பலவீனம் உணரப்பட்டுவிட்டது. எனவே தான் இந்த தரப்புக்கள் தற்போது நேரிடையாக இலங்கையிடம் சென்றுள்ளனவா என கொழும்பு இராஜதந்திர வட்டாரங்களும் கேள்வி எழுப்பியுள்ளன.

• • •

## படிம எரிபொரு... தொடர்ச்சி ...

என்று செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

படிம எரிபொருள் தொடர்பான இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவு எட்டப்பட்டிருந்த போதிலும், பலர் இந்த ஒப்பந்தம் தொடர்பாக ஏமாற்ற உணர்வை அனுபவித்ததை அவதானிக்க முடிந்தது. அதிகமாகப் பாதிக்கப்படுகின்ற சிறிய தீவுகளின் கூட்டணி உட்பட, 100க்கு மேற்பட்ட நாடுகளும் (படிம எரிபொருள்) படிப்படியாகக் குறைக்கப்படவேண்டும் என்ற சொற்றொடர் உள்வாங்கப்படவேண்டும் எனக் கோரியிருந்தன. ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்ட போது, தான் குறிப்பிட்ட இடத்தில் இருக்கவில்லை என்றும் நடந்த விடயங்கள் தொடர்பாகக் குழப்பமடைந்திருப்பதாகவும் சமோவா நாட்டின் பிரதிநிதியான ஆன் ராஸ்முசன் (Anne Rasmussen) தெரிவித்தார்.

குறிப்பிட்ட ஆவணத்தில் பல பலவீனங்கள் இருக்கின்றன எனக் குறிப்பிட்டதோடு "இந்தச் செயற்பாட்டால் நாங்கள் கைவிடப்பட்டிருக்கிறோம்" என்று ராஸ்முஸன் மேலும் தெரிவித்தார். படிம எரிபொருள் தொடர்பான அறிவித்தலை விட ராஸ்முசனது கூற்றுக்கு சபையினர் எழுந்து நின்று பாராட்டுதல் தெரிவித்திருந்தனர்.

எட்டப்பட்ட ஒப்பந்தந்தைக் கரகோசம் செய்து பாராட்டியவர்களுடன் இணைந்துகொள்ளாத ஜாபர், சிறிய தீவுகளின் கூட்டணியின் கருத்து, பதிவில் சேர்க்கப்படும் என்று கூறினார். பசுமையைப் பேணும் நாடுகளிலிருந்து எண்ணெய் வளமான நாடுகள் வரை, மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் அனைவருமே துபாய் ஒப்பந்தத்தைப் பாராட்டினர். ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதற்கு எல்லா நாடுகளின் சம்மதமும் அவசியமாக இருந்தது என்பது ஒரு முக்கிய விடயமாகப் பார்க்கப்பட்டது. அதே நேரம் பல வீனமான நாடுகளைப் பாதுகாக்க இன்னும் அதிகமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்தும் அங்கு பலமாக இருந்ததை அவதானிக்க முடிந்தது.

இந்த நிலையை அடைவதற்குப் பங்கு பற்றிய பிரதிநிதிகள், உடல் ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் மிகவும் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட நேரத்திலிருந்து மேலதிகமாகப் 18 மணித்தியாலங்கள் அந்த இலக்கை அடைய அவசியமாக இருந்தன. இதற்கு முன்னர் தயாரிக்கப்பட்ட வடிவத்தின் மிகவும் பலவீனமான மொழிநடை காரணமாக, திங்கட்கிழமை அதற்கு எதிராக மிகவும் கடுமையான எதிர்ப்பு பதிவுசெய்யப்பட்டிருந்தது.

"தூய்மையான சக்திக் கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு அவற்றின் ஒவ்வொரு படிநிலையிலும் ஆதரவு வழங்கப்பட வேண்டும்" என்று காலநிலைக்கான அமெரிக்காவின் விசேட தூதுவரான ஜோண் கெறி தெரிவித்தார்.

ஐக்கிய இராச்சியத்தின் பிரதம மந்திரியான றிஷி சுணக்கின் றுவாண்டா சட்டமூலத்தை ஆதரிக்க இலண்டன் சென்று மீண்டும் கொப் 28 மாநாட்டுக்குத் திரும்புவதற்காக 7000 மைல்கள் பயணத்தை மேற்கொண்டிருந்த, காலநிலை அமைச்சரான கிரஹாம் ஸ்ரூவாட் (Graham Steuart) பூகோள வெப்பநிலையை 1.5 சென்ரிகிரேட் ஆகப் பேணுவதை 'வட துருவ நட்சத்திரம்' என்று அழைத்தார்.

மாநாட்டின் முதல் நாளன்று தாபிக்கப்பட்ட 'இழப்பு மற்றும் சேதாரநிதி' காலங்கடந்ததொன்று என்று அவர் தெரிவித்திருந்தார். அதே நேரம் கொப் 28 மாநாட்டில் ஐக்கிய இராச்சியம் பரப்புரை செய்த நிலக்கரி தொடர்பான விடயங்கள் குறிப்பிட்ட ஆவணத்தில் உள்வாங்கப்படாதது தொடர்பாக ஏமாற்றத்தை வெளிப்படுத்தினார்.

"எங்களுக்கு விருப்பமில்லாத விடயங்கள் சில இங்கு இருக்கின்றன" என்று அவர் குறிப்பிட்டார்.

1.5 சென்ரிகிரேட் என்ற இலக்கை அடைவதற்காக, சமோவா (Samoa) மற்றும் மாஷல் தீவுகள் (Marshall Islands) போன்றவற்றைச் சுட்டிக்காட்டி, அந்தக் குழுவினர் படிம எரிபொருளைப் படிப்படியாகக் குறைக்க முன்வந்திருக்கின்றார்கள் என்று, ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் உரையாற்றிய ஜேர்மானிய காலநிலை அமைச்சரான, அன்னலேனா பேயர்பொக் (Annalena Baerbock) அந்தக் குழுவினரைப் பாராட்டினார்.

"உங்களை நாங்கள் பார்க்கிறோம். நீங்கள் உணரும் உணர்வுகளை நாங்களும் உணர்ந்து கொள்கிறோம். உங்கள் பிள்ளைகளைப் பொறுத்தவரையில் இந்த ஒப்பந்தத்தில் உள்ள விடயங்கள் போதாது என்பதை நாங்கள் நன்கு அறிந்திருக்கிறோம்."

"காலநிலை நீதியை நிலைநாட்டுவது தொடர்பாக நாம் தொடங்கியிருக்கும் பயணத்தை, நாம் அனை வரும் ஒன்றாக இணைந்து முன்னெடுக்கிறோம்."

**நன்றி: www.independent.co.uk**

## கேணல் தர ... தொடர்ச்சி ...

கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. அது ஒரு கெரில்லா தாக்குதல் என மத்திய கிழக்கு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

ஆனால் கடந்த மாதம் வடக்கு பகுதிமீது மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கை என்பது ஒரு மாதத்தின் பின்னர் தெற்கு நோக்கி நகர்ந்துள்ளது. ஆனால் தற்போதும் வடக்கில் படையினர் கொல்லப்படுவது என்பது வடக்கு பகுதியை இஸ்ரேல் முற்றாக கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவில்லை என்பதையே காட்டுகின்றது.

எனினும் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக இடம்பெறும் தரை தாக்குதலில் கொல்லப்பட்ட 115 படையினரில் 10 விகிதமானவர்கள் தவறுதலாக தமக்குள் இடம்பெற்ற தாக்குதல்களில் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

அதிகளவு படையினர் தமக்கு இடையிலான தாக்குதல்களில் கொல்லப்படுவது என்பது இஸ்ரேலிய படையனர் கெரில்லா தாக்குதல்களை எதிர்கொள்ள முடியாது திணறுகின்றனரா இல்லை புதிதான இணைக்கப்பட்ட பின்னிருக்கை படையினர் களமுனையில் பதற்றத்தில் காணப்படுகின்றனரா என்ற கேள்விகள் எழுகின்றன.

இதனிடையே, கடந்த ஒக்டோபர் மாதம் ஹமாஸ் படையினர் மேற்கொண்ட தாக்கு தலை தொடர்ந்து தற்போது வரையிலும் 450 இற்கு மேற்பட்ட இஸ்ரேலிய படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

## இந்து சமுத்திர ... தொடர்ச்சி ...

செல்கின்றன. உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார வல்லரசின் எரிபொருள் தேவையின் அரை பங்கினை அது நிறைவு செய்கின்றது.

தென்சீனக்கடலில் அவற்றை பாதுகாப்பதற்கு தேவையான ஏவுகணைகள் மற்றும் தாக்குதல் கப்பல்களை அது கொண்டுள்ளது. ஆனால் ஆபிரிக்கா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளில் இருந்து வரும் கப்பல்கள் இந்து சமுத்திரத்தை கடக்க வேண்டும்.

போர் ஒன்று ஏற்படுமானால் இந்த கப்பல்கள் ஆபத்துக்களை சந்திக்கும். வான் படையின் உதவிகள் இன்றி உதவிக்கு விரையும் சீனாவின் கடற்படைக் கப்பல்கள் பொறியில் சிக்கலாம். 2 மில்லியன் பரல்கள் அளவான எரிபொருட்களை எடுத்துச் செல்லும் கப்பல்கள் கைப்பற்றப்படலாம் அல்லது மூழ்கடிக்கப்படலாம். எனவே தான் சீனா இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் தனது கவனத்தை செலுத்தி வருகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் ஆண்டு ... தொடர்ச்சி ...

நிலைப்பாட்டை மேலும் உறுதியாக்கியுள்ளது. எனவே அவர்கள் ஒரு தனித்துவமான அரசியல் அடையாளத்தைத் தேடும் முயற்சியில் உள்ளனர்.

இந்தக் குறைபாடுகள் மற்றும் அதன் பிரபல்யம் குறைந்துவிட்டது என்ற பொதுவான கருத்துக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், பொதுஜன பெரமுன ஒரு முக்கியமான கேள்வியை எதிர்கொள்கிறது. அவை அனைத்துக்கும் பதிலளிக்கும் வகையில்தான் நேற்று வெள்ளிக் கிழமை கட்சியின் இரண்டாது சம் மேளனத்தை கொழும்பில் கூட்டி தமக்கும் ஆதரவு உள்ளது என்பதைக் காட்ட அவர்கள் முற் பட்டுள்ளார்கள். ஆனால், மகாநாட்டுக்கு கூடும் மக்களை மட்டும் கணக்கிட்டு தேர்தல் முடிவுகளை எதிர்வுகூற முடியாது என்பது மஹிந்தவுக்கும் தெரிந்திருக்கும்!

• • •

## இலக்கை அடை ... தொடர்ச்சி ...

பிரதமராகவும், அரச தலைவராகவும் நான்கு தடவைகள் ஆட்சியில் இருந்த அவர் அடுத்த வருடம் வெற்றிபெற்றால் 2030 ஆம் ஆண்டு வரையிலும் பதவியில் இருப்பார் என தெரிவிக்கப்படுகின்றது.

உக்ரைனின் நாசி நடவடிக்கைகளை நிறுத்தி, அவர்களின் ஆயுதங்களை களைந்து, நடுநிலைமையான நாடாக மாற்றுவதே தமது படை நடவடிக்கையின் நோக்கம் எனவும், அதனை நிறைவேற்றும் வரையில் அமைதி முயற்சிகளுக்கு இடமில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் 617000 ரஸ்ய படையினர் தற்போது நிலைகொண்டுள்ளனர். அவர்களில் கடந்த வருடம் இணைத்துக்கொள்ளப்பட்ட 244000 பின்னிருக்கை படையினரும் அடக்கம்.

இதனிடையே, இந்த வாரம் அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்ட உக்ரைன் அதிபர் வெலமிடீர் செலன்கிக்கு எதிர்பார்த்த நிதி உதவிகள் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா விரும்புவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## திமுக வில் இருந்து ... தொடர்ச்சி ...

காரணம் என்பது மகிந்தவின் வாக்குமூலத்திலிருந்து தெரிகிறது. அப்போது ஆட்சியிலிருந்த காங்கிரஸ் அரசின் இந்த மானுடவிரோத நடவடிக்கையை மூடி மறைக்க மோடி அரசு முயல்வதிலிருந்து, தன்னுடைய சுயநலனுக்காக, ஈழத்து உறவுகளை பலிகொடுக்க இந்தியா ஒருபோதும் தயங்காது என்கிற உண்மையைப் புரிந்து கொள்ள முடிகிறது. கள்ள மௌனம் சாதிக்கிற இந்த இந்தியாவை நம்பி, "13 கொடு" "அதிகாரம் பெற்றுக்கொடு" என்றெல்லாம் கேட்கிற அசட்டு அரசியல் தலைவர்களைப் பார்க்கிற போதெல்லாம், பார்க்கின்சன் நோயால் உடல் தளர்ந்திருந்த நிலையிலும், மேனி நடுங்கிய நிலையிலும், இரும்பு மனிதனாய்த் திகழ்ந்த ஈழத்து காந்தி தந்தை செல்வா தான் நினைவுக்கு வருகிறார். தன்னுடைய இறுதி நாட்களில், நாடாளுமன்றத்தில் 'சமஷ்டி' குறித்து பேசிய சிங்கள உறுப்பினரை இடைமறித்து – "சமஷ்டியெல்லாம் முடிந்துபோன கதை. இப் போது நாங்கள் கேட்பது நாடு. எங்களுக்கு தனிநாடு" என்று உறுதியான குரலில் நடுங்காமல் பேசினான் அந்த இரும்பு மனிதன்.

செல்வா சொன்னது ஒரு வரலாற்றுப் பிரகடனம் அதில் ஒரே ஒரு எழுத்தைக்கூட நாம் மறந்துவிடக் கூடாது. அரசியல்வாதிகள் அடுத்த தேர்தலைப் பற்றித்தான் சிந்திப்பார்கள். தலைவர்கள் தான் அடுத்த தலைமுறை பற்றி சிந்திப்பார்கள். இந்த அடிப்படையில் பார்த்தால் செல்வா தான் தலைவன்.

• • •

## இமயமலைப் ... தொடர்ச்சி ...

சமஷ்டி முறையிலானது, அதற்கு பாராளுமன்ற ஆதரவும், புதிய அரசியல் யாப்பும் அவசியம் என்பதையும், அது இப்போது சாத்தியம் இல்லை என்பதையும் கூறினோம்.

அதனால், தற்போது அரசியலமைப்பில் இருக்கக்கூடிய அதிகாரங்களை உங்களுடைய ஜனாதிபதி முறையின் மூலமாக நடைமுறைப் படுத்த முடியும். அதனடிப்படையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கான நல்லிணக்கமாக அமையும் என்ற அடிப்படையில்தான் நாம் பேச்சுக்களைத் தொடர்ந்துகொண்டிருந்தோம்.

இது இவ்வாறிருக்கின்ற போது, மாகாண சபைகளுக்காக புதிய அரசியலமைப்பைக் கொண்டுவர வேண்டும் என்று தென்னிலங்கையில் சொல்லப்படுகின்ற கருத்தை ஏற்று அதற்கேற்றவகையில் ஒரு யோசனை முன்வைக்கப் பட்டால், அதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஈழத் தமிழர்கள் சார்பாக புலம்பெயர்ந்த தமிழர்கள் இவ்வாறான ஒரு கோரிக்கையைத்தான் முன்வைத்துள்ளார்கள் என்று சொல்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுப்பதாகவே இருக்கும். சர்வதேசத்துக்கும் இந்தப் பிரேரணையைக் காட்டி இதுதான் தமிழர்களின் கோரிக்கை என திசைதிருப்பக் கூடிய ஒரு அபாயகரமான நடவடிக்கையை ஜனாதிபதி முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பம் அமைந்திருக்கின்றது. அதனால், இவ் விடயத்தில் நாம் அவதானமாக இருக்க வேண்டும் என்பது எனது கருத்து.

**பெரும்பாலான தமிழ்த் தேசியக் கட்சிகள் உலகத் தமிழர் பேரவையினரை சந்திப்பதற்கு மறுத்துவிட்ட போதிலும், தமிழரசுக் கட்சி மட்டும் அவர்களை சந்தித்தது. இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

தமிழரசுக் கட்சியின் அனைத்துப் பிரதிநிதிகளும் அதில் கலந்துகொண்டிருக்க வில்லை. தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா உட்பட பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் இதில பங்கேற்றிருக்க வில்லை. பட்ஜெட் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தமையால் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில்தான் தங்கியிருந்தார்கள். ஆனால், அவர்கள் யாரும் அந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருக்கவில்லை.

ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் இதில் கலந்துகொண்டு, இது ஏதோ தமிழ் மக்களுடைய தீர்வுக்கு வழிகோலப் போகின்றது, இதனை வரவேற்கிறோம் என்று சிறுபிள்ளைத் தனமாக குளிர்காய்ந்துகொண்டிருந்ததை நாம் அவதானித்திருக்கின்றோம். தமிழரசுக் கட்சி இதற்கான அனுமதியை வழங்கியிருந்தால், அவர்களுடைய சமஷ்டி முறையிலான கோரிக்கை, அதுவே இறுதித் தீர்வு என்பதற்கும் இந்த இமாலய பிரகடனத்துக்கும் இடையிலான மாறுபட்ட இடைவெளியை அவதானிக்க முடியும்.

ஆகவே, இந்த தமிழ் மக்களின் அபிலாஷைகளைக் குழிதோண்டிப் புதைக்கும் பிரேரணையை தமிழரசுக் கட்சி ஏற்றுக்கொண்டுவிட்டதா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் இப்போது ஏற்பட்டிருக்கின்றது. இவ்விடயத்தில் தமிழரசுக் கட்சி மௌனமாக இருப்பது அதனை அவர்கள் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள் என்பதே அர்த்தம்! அப்படியானால் அவர்கள் சமஷ்டிக் கோரிக்கையை கைவிட்டு மாகாண சபைக்கான அரசியல் யாப்பைக் கோருகிறார்கள் என்ற அர்த்தத்தை அது உருவாக்கும். தமிழரசுக் கட்சித் தலைவர்கள் இதற்கு சரியான பதிலொன்றை வழங்க வேண்டும்.

• • •

## போஷாக் ... தொடர்ச்சி ...

வறிய குடும்பங்களின் எண்ணிக்கை 24.3 ஆகவும், 2006/07 இல் 25.8 ஆகவும் காணப்பட்டது. இந்நிலையில் வறுமையின் தாக்கம் பெருந்தோட்ட சிறுவர்களின் போஷாக்கின் மையில் மிகுந்த செல்வாக்கு செலுத்தியுள்ளதை அவதானிக்கலாம். கடந்தகாலத்திலும் சமகாலத்திலும் மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகளும் இதனை புலப்படுத்தியுள்ளன.

### இறப்புகள் அதிகம்

1976ம் ஆண்டு இடம்பெற்ற 'இலங்கை போஷாக்கு அளவீடு ' கிராமிய சிறுவர்களைவிட தோட்டப்புற சிறுவர்களே பெருமளவு நீடித்த போஷாக்கின்மையாலும், குறை போஷாக்கினாலும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றது. தோட்டப் பகுதிகளில் கலோரியளவில் உணவு நுகர்ச்சி சராசரிக்கு மேலாக இருப்பினும், புரத, உயிர்ச்சத்துக்கள் நிறைந்த உணவு நுகர்ச்சி மிக மிகக் குறைவாக இருப்பதனால் அவர்கள் பல்வேறு நோய்களுக்கும் ஆளாகின்றனர். 1992, 2004, 2019 ம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் பெருந்தோட்ட சிறுவர்களின் குறைபோஷாக்கு நிலையை எடுத்துரைப்பதாகவே உள்ளன. இலவச மருத்துவ வசதிகள் வழங்கப்பட்டபோதும் போதியளவு போஷாக்கான உணவு உட்கொள்ளப்படாமையின் காரணமாக போஷாக்கின்மை நோய்க்குஆளாகும்தன்மை தோட்டப்புறங்களில் அதிகரித்து காணப்பட்டது.

இதேவேளை தோட்ட மருந்தகங்களிலே அடிப்படை மருத்துவ வசதிகளே வழங்கப்பட்டதனால் நோய்வாய்ப்பட்டு இறப்பவர்களின் எண்ணிக்கையும் கணிசமாக காணப்பட்டதாக வலியுறுத்தல்கள் இடம்பெற்றுள்ளன. ஆசிய நாடுகளிடையே ஆகக்கூடிய குறை போஷாக்கினைக் கொண்ட நாடுகளில் திமூர் லெஸ்தோ (26.9%), ஆப்கானிஸ்தான் (26.8%), இலங்கை (22.1%), பாகிஸ்தான் (22%) மொங் கோலியா (20.5%), வங்காளதேசம் (16.4%), இந்தியா ((15.2%) என்றவாறு நிலைமைகள் காணப்படுகின்றன.

இலங்கையின் ஒப்பளவான சில ஆரோக்கியம் தொடர்பான விபரங்களை அடிப்படையாக வைத்து நோக்குகையில் 2016 ம் ஆண்டில் அது பின்வருமாறு அமைந்திருந்தது. ஐந்து வயதுக்கும் குறைந்தவர்களிடையே வளர்ச்சி குறைந்தவர்கள் வீதம் தேசியளவில் 17 ஆகவும்,தோட்டப்புறங்களில் 31.7 வீதமாகவும் இருந்தது. ஐந்து வயதுக்கும் குறைந்தவர்களிடையே குறை நிறை கொண்டவர்கள் வீதமானது தேசியளவில் 20.5 ஆகக் காணப்பட்டதோடு தோட்டப்புறங்களில் இது 29.7 ஆகும். இதேவேளை உயரம் மற்றும் நிறை என்பவற்றுக்கிடையே ஏற்ற தொடர்பின்மை (BMI) வீதமானது தேசியளவில் 9.1 ஆகவும், தோட்டப்புறங்களில் 22 ஆகவும் காணப்பட்டது. நிறையிழந்து செல்கின்றமை தேசியளவில் 13.4 வீதமாகவும், தோட்டப்புறங்களில் 15.1 வீதமாகவுமிருந்தது. இதைப்போன்றே மேலும் பல விடயங்களும் தேசியளவைக் காட்டிலும் பெருந்தோட்டங்களில் அதிகரித்த வீதத்தையே வெளிப்படுத்தின.

பெருந்தோட்ட சிறுவர்களின் போக்குகள் இவ்வாறிருக்க பெருந்தோட்ட கர்ப்பிணித் தாய்மார் மத்தியில் பாரிய மன உளைச்சல் காணப்படுவதாகவும்,இந்நிலையானது பிறக்கும் குழந்தைகளின் ஆரோக்கியத்தில் தாக்கம் செலுத்துவதாகவும் பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழு தெரிவித்துள்ளது. மேலும் சிறுவர் போஷாக்கின்மை தொடர்பில் அரச நிறுவனங்கள் முன்வைத்துள்ள புள்ளிவிபர அறிக்கைகளில் இருந்து நாட்டின் உண்மை நிலைமை புலப்படுவதில்லை.

ஆகவே போஷாக்குத் தேவையுடைய பிள்ளைகளை சரியாக இனங்கண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பாராளுமன்ற விசேட குழு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. இந்நிலையில் பின்தங்கிய வெளிப்பாடுகளைக் கொண்டுள்ள பெருந்தோட்ட சிறுவர்களின் போஷாக்குநிலை தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி அச்சிறுவர்களின் போஷாக்கு மேம்பாட்டிற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்பதோடு அரசாங்கம் இதிலிருந்தும் விலகிச் செல்ல முற்படுதல் கூடாது. அவ்வாறு விலகிச் செல்வதால் பாதக விளைவுகள் மேலும் அதிகமாகும்.

• • •

## சிறந்த பெண் ... தொடர்ச்சி ...

குரலில் எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகக் கூடிய திறமைகளை கொண்டும் காணப்படுகிறாள். ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் மாத வருமானமாக 20 ஆயிரம் ரூபா பெற்றவள் தற்போது அது பல மடங்காக அதிகரித்துள்ளது.

"அரச பேருந்துகளில் தான் ஏனைய இடங்களுக்கு வளவாளராக செல்வேன் அதிக வெப்ப நிலை காரணமாக தலைவலி ஏற்படும் இதனால் உடல் சோர்வு அவ்வப்போது ஏற்பட்டாலும் அதனை பொருட்படுத்தாது சுயமாக உழைக்க வேண்டும்" என கூறினார். மூன்று பாடசாலை செல்லும் ஆண் பிள்ளைகளை படித்து எதிர்காலத்தில் பல கனவுகளுடன் வாழ வேண்டும் என யோசிக்கின்ற இந்த பெண் தனது இரண்டாவது மகனை புத்தளத்தில் உள்ள மேர்சி எனது பாடசாலையில் கற்பதற்காகன வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுத்தும் உள்ளார்.

தற்போதைய தொழில் செய்யும் உற்பத்தி பகுதியானது சிறிய இடமாக உள்ளதால் தொழிலை மேற்கொள்வது கடினமாக உள்ளது இதனை விருத்தி செய்ய வேண்டும் என பலத்த எதிர்பார்ப்பு அவளது மனதுக்குள் குடி கொண்டிருக்கிறது " 15 இலட்சம் வங்கி கடனுக்காக அப்போது முதல் விண்ணப்பம் செய்து அது கிடைக்கவில்லை அதனை விட்டு விட்டேன்" என கூறினாள்.

சமூகத்தில் தான் ஒரு பெண்ணாக நின்று முன்னேற வேண்டும் ஆண்கள் மாத்திரம் தான் சுயதொழில் செய்ய வேண்டும் அதனை சந்தைப் படுத்த வேண்டும் என்ற நிலை இன்றி பெண்களும் சாதிக்கலாம் வறுமைக்கு இடமில்லாமல் தன்னை ஒரு முன்னுதாரணமாக நிறுத்தி தான் மூலமாக ஏனைய ஆறு குடும்பங்கள் இவளை நம்பி வாழ்கின்றன.

சந்தைப்படுத்தலை மேற்கொள்ள பல வழி வகைகளை பயன்படுத்தி உள்ளார். சமூக வலைத்தளம்ஊடாக இணையவசதி சந்தைவாய்ப்பு மற்றும் தனது கடைக்கு நேரடியான சில்லறை மொத்த விற்பனை என பல சந்தைப்படுத்தல்களை விருத்தி செய்து புன்முறுவலுடன் சந்தோசமான குடும்ப வாழ்க்கையினை வாழ்ந்து வருகிறார். தனது கணவனின் தகப்பன் ஒரு முதியோர் அவரும் இவரது கண்காணிப்பில் வீட்டில் வசித்து வருகிறார் வயோதிபரை கவனித்தும் தொழிலை முன்னெடுத்துச் செல்லும் மனம் தளராத ஒரு சாதனை பெண்ணாக இந்த பெண் மாறி வருகிறாள் இதன் மூலம் நாட்டின் பொருளாதார துறைக்கும் பாரிய பங்களிப்பு செய்து வரும் ஒரு இரும்புப் பெண்ணாக திகழ்கிறாள்.

கொரேனா காலங்களில் விற்பனை துறையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது அதனை பொருட்படுத்தாது எஞ்சியிருக்கும் பல மீற்றர் கொண்ட துணி வகைகளை கொண்டு பைகளை தைத்து சேமித்து வைத்தாள் கொரோனாவில் இருந்து நாடு மீண்டதன் பின்னர் சந்தை வாய்ப்பை அதிகரித்து அதில் இருந்து கிடைக்கப் பெற்ற இலாபத்தில் ஒரு தையல் இயந்திரத்தையும் வாங்கினார்.

• • •